பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 மாசி 26 திங்கட்கிழமை 10.03.2025 கதிர் 122

### இனி இது ரகசியம் அல்ல!

தமிழ் அரசுக் கட்சியின் உள்ளூராட்சி சபைத் தேர்தலைத் தனித்தே எதிர்கொள்வது என்பதை கட்சியின் மத்திய குழு நேற்று ஏகமனதாக முடிவு செய்தது. ☞ 2

# ஆளும் தரப்பினது எதிர்காலத்தை உள்ளாட்சி தேர்தல் முடிவுசெய்யும்

## ஐக்கிய மக்கள் சக்தி நம்பிக்கை

ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல்களில் மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) பெற்றுக்கொண்ட வாக்குகளை உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் பெற்றுக் கொள்ள முடியாது. ஆளும்தரப்பின் எதிர்காலத்தை தீர்மானிப்பதாக இந்தத் தேர்தல் அமையும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசியபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த தேர்தல்களில் ஐக்கிய மக்கள் சக்தி கொழும்பில் பல தொகுதிகளில் வெற்றி பெற்றது. அந்த வகையில் இம்முறைத் தேர்தலிலும் எம்மால் வெற்றி பெற முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது. ஆட்சியிலுள்ளவர்களின் எதிர்காலத்தைத் தீர்மானிப்பதாக இந்த உள்ளூராட்சிமன்றத் தேர்தல் அமையும். 2018ஆம் ஆண்டு உள்ளூராட்சிமன்றத் தேர்தல், 2019 ஜனாதிபதித் தேர்தல், 2020 பொதுத் தேர்தல் என்பன இதற்குச் சிறந்த உதாரணங்களாகும்.

இதற்கு முன்னரும் இவ்வாறான முடிவுகள் பதிவாகியிருக்கின்றன. இந்த சந்தர்ப்பத்தில் ஐக்கிய மக்கள் சக்தியை விட்டு வெளியேறுமளவுக்கு புத்தி சுயாதினமற்றவர்கள் எமது கட்சியில் இல்லை. ஊழல், மோசடியற்ற எவரும் எம்முடன் இணையலாம். ஜே.வி.பியைத் தவிர வேறு எந்த கட்சியிலிருப்பவர்களுக்கும் வாய்யப்பளிக்கப்படும்.

தற்போது பெலவத்தையிலுள்ள ஜே.வி.பி. அலுவலகத்தின் மனித வளங்களே நாடாளுமன்றத்திலுள்ளன. அவர்களால் சுயமாக செயற்படமுடியாது. பெலவத்த அலுவலகத்தின் கட்டளைகளுக்கமையவே செயற்படுவர். எனவே உள்ளூராட்சி மன்றங்களுக்கான உறுப்பினர்களையும் அவ்வாறு தெரிவு செய்து விடவேண்டாம். நாடாளுமன்ற உறுப்பினர்கள் பரிந்துரைப்பவர்களுக்கு வாக்களிக்காமல் மக்கள் சுயமாக சிந்தித்து வாக்களிக்க வேண்டும்.

ஐக்கிய தேசிய கட்சியுடனான ☞ 2

உள்ளூராட்சி சபைத் தேர்தலில்

# பெண்கள், இளைஞர்களுக்கு போதிய ஒதுக்கீடு தரவேண்டும்

## ஆணையாளர் வலியுறுத்து

உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் போட்டியிடவுள்ள அரசியல் கட்சிகள் தமது வேட்புமனுக்களில் பெண்களுக்கும், இளைஞர்களுக்கும் போதுமான ஒதுக்கீட்டை வழங்க வேண்டும். மார்ச் 20க்குப் பின்னரே வாக்களிப்பு நாள் அறிவிக்கப்படும் என்று தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார்.

அவர் உள்ளூராட்சிமன்றத் தேர்தல் குறித்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோது இதனைத் தெரிவித்தார். ☞ 8

# குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸ் அதிகாரி வவுனியாவில் கைது

## போதைப் பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில்

குருநாகல் பொலிஸ் நிலையத்தில் குற்றத் தடுப்புப் பிரிவு உப பொலிஸ் பரிசோதகராகக் (சப் இன்ஸ்பெக்டர்) கடமையாற்றும் அதிகாரி ஒருவர் வவுனியா போதைப் புனர்வாழ்வு நிலையத்தில் கைது செய்யப்பட்டார். நீதிமன்ற உத்தரவின்படி நிலையத்திற்குப் போதைப் பொருளை எடுத்து வந்தார் என்று அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

போதை மறுவாழ்வு நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தனது மகனுக்கு வழங்குவதற்காக போதைப் பொருளை அவர் எடுத்து வந்திருக்கலாம் என்று அதிகாரிகள் சந்தேகிக்கின்றனர்.

போதைப் பொருள் பாவனை தொடர்பில் கைது செய்யப்பட்ட இளைஞர் ஒருவர் நீதிமன்ற ☞ 2

# ஆளும் கட்சி வட- கிழக்கு எம்.பிக்கள் வெறும் கூலிகள்

## தமிழ் அரசுக் கட்சி முன்னாள் செயலர் கருத்து

**வடக்கு - கிழக்கு மாகணத்தில் உள்ள ஆளும்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய தேவைகளைக்கூட எங்களுக்கூடாகவே நிறைவேற்ற வேண்டியவர்களாக உள்ளார்கள். அவர்கள் அங்கு கூலியால் போல்தான் இருக்கிறார்கள். பொம்மைகள் போலதான் உள்ளார்கள் என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் செயலாளருமான சத்தியலிங்கம் தெரிவித்தார்.**

**வவுனியா, குருமன்காடு, காளிகோவில் வீதியில் நாடாளுமன்ற உறுப்பினரின்**




**அலுவலகத்தை திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:**

**வவுனியா மாவட்டத்தில் மட்டுமின்றி வடக்கு - கிழக்கில்** ☞ 2

# ஆர்.ரி.ஐ. ஆணைக்குழுவின் தலைவர் திடீர் பதவி விலகல்

இலங்கை தகவல் அறியும் உரிமை (RTI) ஆணைக் குழுவின் தலைவர் பதவியில் இருந்து ஓய்வுபெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி உபாலி அபேரத்ன உடனடியாகப் பதவி விலகியுள்ளார். அவரது பதவி விலகல் கடிதம் மார்ச் 4, 2025 ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

அவரது பதவி விலகலிற்கான காரணங்கள் கடிதத்தில் குறிப்பிடவில்லை.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் (RTI சட்டம்) பிரிவு 12(1) இன் படி, அரசமைப்புச் சபையின் பரிந்துரைகளின் அடிப்படையில் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட நான்கு ஆணையர்கள் மற்றும் ஒரு தலைவரை தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஆணையம் கொண்டுள்ளது. இலங்கை வழக்கறிஞர்கள் சங்கத்தை (BASL) ☞ 2

# டிரான் அலஸுக்கு எதிராக அநுர செயற்படமாட்டார்

## எல்லோரும் நண்பர்கள் என்கிறார் சம்பிக்க

தலைமறைவாகியுள்ள முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்துவின் பின்னணியில் முன்னாள் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் உள்ளார். ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க , டிரான் அலஸிற்கு எதிராகச் செயற்படமாட்டார். இதனால்தான் தேசபந்து தென்னகோன் பாதுகாக்கப்படுகிறார். வி.எப்.எஸ். விசா கொடுக்கல் வாங்கல் மோசடி தொடர்பில் டிரான் அலஸிற்கு எதிராக எவ்வித நடவடிக்கைகளும் இதுவரையில் மேற்கொள்ளப்படவில்லை. இவர்கள் அனைவரும் நண்பர்கள், இவர்களின் டீல் அரசியலை நாங்கள் நன்கு அறிவோம் ☞ 2

# சிறப்புரிமை மட்டும் இல்லையேல் சட்ட நடவடிக்கை பாய்ந்திருக்கும்

## பொது ஜன பெரமுன முன்னாள் எம்பி ஆளும்தரப்புக்கு எச்சரிக்கை

நாடாளுமன்ற சிறப்புரிமைகளின் பின்னால் மறைந்திருந்துகொண்டு ஆளும்தரப்பு செயற்படக்கூடாது. கடந்த ஆட்சிகாலங்களில் இடம்பெற்ற விடயங்கள் தொடர்பில் இந்த ஆளும்தரப்பால் நாடாளுமன்றத்தில் பட்டியல்கள் வெளியிடப்படுகின்றன. பொது ☞ 8

# கைது செய்த நபரை தாக்கி காயப்படுத்திய பொலிஸார்

## மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு

மூதூர் பொலிஸாரினால் விசாரணைக்காகக் கைது செய்யப்பட்ட குமாரபுரத்தைச் சேர்ந்த குடும்பத் தலைவர் ஒருவர் கடுமையாகத் தாக்கிச் சித்திரவதை செய்யப்பட்டுள்ளார் என்று குற்றச்சாட்டு எழுந்துள்ளது. பாதிக்கப்பட்ட நபர் மேலதிக சிகிச்சைகளுக்காக திருகோணமலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

குமாரபுரத்தைச் சேர்ந்த 6 பிள்ளைகளின் தந்தையான நாகராசா லிங்கேஸ்வரன் ☞ 2

# 5 வருடங்களின் பின் தூக்குத் தண்டனை கைதி மாட்டினார்

கழுத்தை அறுத்து இளைஞன் ஒருவரைக் கொலை செய்ததற்காக பாணந்துறை மேல் நீதிமன்றத்தால் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டு கிட்டத்தட்ட ஐந்து ஆண்டுகளாக பொலிஸாரிடம் சிக்காமல் தப்பி வந்த குற்றவாளி சிலாபத்தில் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கைது செய்யப்பட்ட சிந்தக மதுபாஷண நாளை பாணந்துறை மேல் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட உள்ளார். சிலாபம் ☞ 8

தொடர்ந்து தலைமறைவாக இருந்தால்

# தேசபந்து தென்னக்கோனின் சொத்துக்கள் முடக்கப்படும்

நீதிமன்ற உத்தரவுக்கமையத் தேடப்பட்டுவரும் முன்னாள் பொலிஸ் மா அதிபர் (ஐஜி) தேசபந்து தென்னக்கோன் தொடர்ந்தும் தலைமறைவாகி இருப்பாரானால் அவரது சொத்துக்கள் முடக்கப்படும் என்று பொதுப் பாதுகாப்பு துணை அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்தார்.

மோதராவில் நடைபெற்ற விழா ஒன்றில் கலந்து கொண்ட பின்னர் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் இது குறித்து மேலும் தெரிவித்ததாவது:

☞ 8

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

கட்சித் தலைவர சிவஞானம் கூட்டத்தில் புளொட், ரெலோ தலைவர்கள் தனக்கு எழுதிய கடிதங்களை வாசித்துக் காட்டினார். அதனை அந்தளவுடனேயே கைவிடுவது என்று முடிவு செய்யப்பட்டது.

அவர்கள் ஜனநாயகக் கூட்டணியிலேயே தொடர விரும்பும் நிலையில், அந்தக் கூட்டணியோடு கூட்டுச் சேரும் தேவை ஏதும் இல்லை என்று கட்சி தீர்மானித்தது. அது மட்டுமன்றி உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வேட்பாளர்களைத் தெரிவு செய்யும் அதிகாரங்களை கட்சியின் மாவட்டக் கிளைகளிடம் விட்டுவிடவும் முடிவு செய்யப்பட்டது. தொகுதிக் கிளைகளின் ஆலோசனையோடு மாவட்டக் கிளை இந்தப் பட்டியலை இறுதி செய்யும்.

கட்சியின் ஒழுக்க விதிகளை மீறி நடந்தவர்களைஉள்ளூராட்சிசபைத்தேர்தலில் போட்டியிட அனுமதிப்பதா இல்லையா என்பதிலேயேநீண்டநேரம்கலந்துரையாடல் இடம்பெற்றது. 2023 ஏற்கனவே வேட்பாளர் பட்டியில்சேர்த்துக்கொள்ளப்பட்டவர்களில்சிலர் கட்சியின் கொள்கைக்கு எதிராக ஜனாதிபதித் தேர்தல்மற்றும்நாடாளுமன்றத்தேர்தல்களில் செயற்பட்டுள்ளனர். இவர்களில்நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டவர்களைக் கட்சியிலிருந்து நீக்குவது என்று ஏற்கனவே முடிவு எடுக்கப்பட்டுவிட்டதால் அவர்களை உள்ளூராட்சி சபைத் தேர்தல் பட்டியலில் இருந்துநீக்குவது என்று முடிவெடுக்கப்பட்டது. மற்றொருதரப்பினர் ஜனாதிபதித் தேர்தலிலோ நாடாளுமன்றத் தேர்தலிலோ போட்டியிடாத போதும் இந்த இரு தேர்தல்களிலும் கட்சிக்கு எதிரானநிலைப்பாட்டோடுசெயற்பட்டுள்ளனர். இவர்களிடம் இருந்து விளக்கம் கேட்பது என்று கட்சி ஏற்கனவே முடிவு செய்திருக்கிறது. எனவே அப்படிப்பட்டவர்களுக்குத் தேர்தலில் போட்டியிட வாய்ப்பு வழங்குவதா என்பது தொடர்பில் நீண்ட கலந்துரையாடல் இடம்பெற்றது.

அவர்களிடம் விளக்கம் மட்டுமே கேட்கப்பட்டுள்ளது, அவர்கள் மீது இன்னும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதால் அவர்களை தேர்தலில் போட்டியிட அனுமதிக்கவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் வாதாடினார். தலைவரும் அதனை ஆமோதித்தார். ஏனெனில் இந்த விடயத்தில் சிறீதரன் ஆதரவாளர்களான வேளமாலிகிதன் போன்றவர்கள் மாட்டுப்பட்டுள்ளதால், அவர்களுக்காக வாதாட வேண்டியவராக இருந்தார் சிறீதரன்.

இறுதியில் அத்தகையவர்கள் கட்சியிடம் மன்னிப்புக்கேட்டும்இனிமேல்கட்சிகுஎதிராகச் செற்படமாட்டோம் என்று சத்தியக்கடாதாசி ஒன்றைச் சமர்ப்பித்த பின்னர் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்கு அனுமதிப்பது என்று கட்சி தீர்மானித்தது. அந்தச் சத்தியக் கடதாசியை கட்சியே தயாரித்து வழங்கும் என்றும் அதில் கையொப்பம்இடுவோருக்குமட்டும்தேர்தலில் போட்டியிட வாய்ப்பு வழங்குவது என்றும் முடிவெடுக்கப்பட்டது.

அதேசமயம், எந்தவொரு சபைக்கும் முதன்மை வேட்பாளர் யார் என்பதைத் தேர்தலுக்குமுன்னர்அறிவிப்பதில்லைஎன்றும் முடிவெடுக்கப்பட்டது. அப்படி அறிவிப்பதன் மூலம் அத்தகைய நபர்களை இலக்கு வைத்துத் தோற்கடிக்க மற்றைய கட்சிகள் சதி செய்யலாம்என்பது உட்படப்பலகாரணங்கள் முன்வைக்கப்பட்டதை அடுத்து தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெறுபவர்களிடம் இருந்தே சபைகளுக்கான தலைவர்கள், மாநகர சபை மேயர் ஆகியோரைத் தெரிவு செய்வது என்றும் முடிவெடுக்கப்பட்டது.

கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவரானசிறீதரன்கட்சியின்முடிவுகளுக்கு முரணான வகையில் நாடாளுமன்றக் குழுக்களிலும் அரசமைப்புச் சபையிலும் செயற்படுவது குறித்தும் கூட்டத்தில் ஆராயப்பட்டது. நாடாளுமன்றக்குழுத்தலைவர என்றவகையில்முடிவுகளைஎடுக்கும்அதிகாரம் அவருக்கு இருக்கின்றபோதும் அது- கட்சியின் கொள்கைகள், முடிவுகளோடு அனுசரித்துப் போவதாக இருக்கவேண்டும், முரண்படாக இருக்கவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது. பதிலளித்த சிறீதரன், தனக்குத் தெரிவிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையிலேயே தான் அந்த முடிவை எடுத்தார் என்றும் நாடாளுமன்றக் குழுத் தலைவர் என்ற முறையில் நாடாளுமன்றத்தில் கட்சி சார்பில எடுக்கப்படும் முடிவுகள் அனைத்தும் தனக்குத் தெரியப்படுத்தப்படவேண்டும் என்று, தனக்குத் தெரியாமல் காரியங்கள் நகர்த்தப்படக்கூடாது என்றும் வலியுறுத்தினார்.

இந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் கட்சி கொழும்பில் போட்டியிடுவதில்லை என்றும் முடிவு செய்யப்பட்டது. அதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்குப் போதிய கால அவகாசம் இருக்கவில்லை என்று கொழும்புக் கிளைத் தலைவர் தெரிவித்தார். கொழும்பு மாநகர சபைக்கு நூ-ற்றுக்கும் மேற்பட்ட வேட்பாளர்கள் தேவைப்படும் நிலையில் ஒவ்வொரு வட்டாரங்களில் இருந்தும் வேட்பாளர்களின் விவரங்களைச் சரிபார்த்துப் பொருத்தமானவர்களைத் தேர்வுசெய்வதற்குக் கால அவகாசம் போதவில்லை என்றும் சரிபார்க்கப்பட்ட வகையில் மூன்லொரு பங்கு வேட்பாளர்களையே இதுவரையில் உறுதிப்படுத்த முடிந்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டதை அடுத்து இந்தத் தேர்தலில் கொழும்பில் போட்டியிடுவதில்லை என்ற முடிவு எட்டப்பட்டது.

அதேநேரம், இப்போதிருந்தே தயாரிப்புக்களைச் செய்து அடுத்த உள்ளூ-ராட்சி சபைத் தேர்தலில் கொழும்பில் முழுமையாகப் போட்டியிடுவது என்றும் தீர்மானிக்கப்பட்டது..

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## ஆளும் கட்சி....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெரும்பாலான சபைகளை எமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவேண்டும். இந்தத் தேர்தல் முறை என்பது சிக்கலானது. நாங்கள் கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வன்னியில் புதுக்குடியிருப்பு, பூநகரி ஆகிய பிரதேச சபைகளை மாத்திரே ஒரு கட்சியாக, தமிழ் தேசியக் கூட்டமைப்பாக ஆட்சி செய்தோம்.

வவுனியாவில் எல்லா சபைகளிலும் பெரும்பான்மையான வட்டாரங்களை கைபபற்றி இருந்தாலும்கூட நாங்கள் எதிர்கட்சியாகவே இருக்கவேண்டி இருந்தது. அதற்கு இந்த உள்ளூராட்சித் தேர்தல் முறையே காரணம்.

அதனால்தான் கடந்த உள்ளூராட்சி மன்றத்திற்குரிய வேட்புமனுக்கள் கோரப்பட்டபோது கூட்டமைப்பில் உள்ள கட்சிகள்தனித்தனிக்கட்சிகளாகப்போட்டியிட்டு ஒன்று சேர்ந்து ஆட்சி அமைப்போம் என்று எமது கட்சிக்குள் முடிவெடுத்தோம். ஆனால் அதன் பின் நடந்தவைகள் உங்களுக்குத் தெரியும்.

இம்முறைஎமக்குச்சவாலானஉள்ளூராட்சி தேர்தல் நடைபெற இருக்கிறது. இந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அதிக வாக்குளைப் பெற்றுத் தனிப் பெரும் கட்சியாக ஆட்சி அமைத்துள்ள ஜனாதிபதியின் கட்சியும் வடக்கு - கிழக்கில் போட்டியிடவுள்ளது. கடந்த உள்ளூராட்சி தேர்தலில் அவர்கள் வடக்கு - கிழக்கில் போட்டியிடவில்லை.

அரசியல் ரீதியாக கொள்கை, ரீதயாக வேறுபாடுகள் இருந்தாலும் கூட ஒவ்வொரு வட்டாரத்திலும் போட்டியிடும் வேட்பாளர் தான் கட்சியின் வெற்றியை தீர்மானிக்கப் போகின்றார். இதனால் நாம் பல முக்கிய முடிவுகளை எடுத்துள்ளோம்.

வவுனியா மாவட்டம் மிகவும் சவாலுக்கு உட்படுத்தப்பட்ட ஒரு மாவட்டம். எமது மாவட்டத்தில் இனப் பரம்பலை மாற்றக்கூடிய வகையில் பல பிரச்சனைகள் இடம்பெறுகின்றன. எங்களது மக்களது காணிகள் அபகரிக்கப்படுகின்றன. பல திணைக்களங்கள் எமது காணிகளைக் கையகப்படுத்துகின்றன. எமது இடம்பெயர்ந்த மக்கள் குடியேற முடியாத நிலை இருகிறது. வன்னி தேர்தல் மாவட்டத்திலும் இருப்பைக் காப்பாற்ற வேண்டிய நிலையில் இருந்து வருகின்றோம்.

அந்த வகையில் நாடாளுமன்றத்தில் நானும், ரவிகரனும் குரல் கொடுத்து வருகின்றோம். அமைச்சர்களோடு பழகி வருகின்றோம். எமது மக்கள் சார்ந்த செயற்பாடுகளுக்காக அவர்களுடன் சண்டை பிடிக்கவில்லை. தவறுகளைக் கூறுகின்றோம். பல வாக்குறுதிகளைத் தந்துள்ளார்கள். சில நிறைவேற்றப்பட்டுள்ளன.

ஆனால், வடக்கு - கிழக்கு மாகணத்தில் ஆளும் கட்சி உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டவர்கள் தங்களுடைய தேவைகளைக்கூட எங்களுக்கூடாகவே நிறைவேற்றவேண்டியகட்டத்தில்உள்ளார்கள். அதுஒருபரிதாபமானவிடயம். அவர்களுக்கான குரல் அங்கு ஒலிப்பதற்கு இடமில்லை. அவர்கள் அங்கு கூலியாட்கள் போலத்தான் இருக்கிறார்கள். பொம்மைகள் போல தான் உள்ளார்கள். அதுதான் ஜதார்தம். உண்மை.

அண்மையில் கருத்து வெளியிட்ட ஊடகம் ஒன்றுதரப்பட்டியில்வடக்குகிழக்குஆளும்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கீழ் மட்டத்தில் இருக்கிறார்கள் எனக் காட்டியது. எவ்வாறு இருந்தாலும் எமக்கு சவால் மிக்கது இந்த தேர்தல். அதை மனதில் வைத்து செயற்பட வேண்டும் - என்றார். (100)

## டிரான் ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

ஹோமாகம பகுதியில் நேற்று தனது கட்சியின் தேர்தல் கண்காணிப்பு காரியாலயத்தை திறந்து வைத்து உரையாற்றியபோதுமேலும்தெரிவித்ததாவது:

நட்டமடைந்த அரச நிறுவனங்களை இலாபமடையசெய்த அனுபவம் எமக்குள்ளது. நாட்டுக்காக அர்ப்பணிப்புடன் செயற்படக் கூடியவர்கள் எம்மிடம் உள்ளார்கள். ஹோமாகமபிரதேசசபையின்வருமானத்தை 100 கோடி முதல் 200 கோடி வரையில் எம்மால் அதிகரிக்க முடியும். ஆகவே பழைய அரசியல் கட்சிகளுக்கு வாக்களிப்பது இனி பயனற்றது. ஐக்கிய குடியரசு முன்னணி பென்சில் சின்னத்தில் புதியவர்களை களமிறக்கும்.

மின்கட்டணத்தை மூன்றில் ஒன்றாக குறைப்பதாகவும், மக்களுக்கு நிவாரணம் வழங்குவதாகவும், ஊழல்வாதிகளை பிடிப்பதாகவும், ஊழல் செய்த அரச நிதியை மீண்டும் அரசுடமையாக்குவதாகவும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க குறிப்பிட்டார். வழங்கிய வாக்குறுதிகள் ஏதும் இதுவரையில் நிறைவேற்றப்படவில்லை. ஆகவே நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மக்கள் இதற்கு தகுந்த பாடம் கற்பிக்க வேண்டும்.

இலங்கை மின்சார சபை நட்டமடைகிறது. ஆகவேமூன்றில்ஒருபங்காகமின்கட்டணத்தை குறைக்க முடியாது என்று ஆளும் தரப்பினர் இப்போது குறிப்பிடுகிறார்கள். மின்சார சபை கடந்த ஆண்டு 144 பில்லியன் ரூபா இலாபமடைந்துள்ளது. மின்கட்டணத்தை குறைப்பது தொடர்பில் பல விடயங்களை எதிர்வரும் நாட்களில் வெளியிடுவோம்.

ஆளும்தரப்பு நாட்டு மக்களுக்கு பல பொய்களை வாக்குறுதிகளாக வழங்கியது. ஆட்சிக்கு வந்தவுடன் மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜூன மகேந்திரனை நாட்டுக்கு அழைத்து வருவதாகவும், சர்வதேச பொலிஸ் ஊடாக சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டது. ஆனால்இதுவரையில்எந்தநடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க பதவியில் இருக்கும்வரையில் அர்ஜூன மகேந்திரனுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது.

தேசபந்து தென்னகோனை கைது செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ள நிலையிலும் இதுவரையில் அவர் கைது செய்யப்படவில்லை. எங்கோ தலைமறைவாகியுள்ளார். தேசபந்துவின் பின்னணியில் முன்னாள் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் உள்ளார். ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க , டிரான் அலஸிற்கு எதிராக செயற்படமாட்டார். இதனால்தான் தேசபந்து தென்னகோன் பாதுகாக்கப்படுகிறார். அத்துடன்வி.எப்.எஸ்விசா கொடுக்கல்வாங்கல்; மோசடிதொடர்பில்டிரான் அலஸிற்கு எதிராக எவ்வித நடவடிக்கைகளும் இதுவரையில் மேற்கொள்ளப்படவில்லை. இவர்கள்அனைவரும்நண்பர்கள், இவர்களின் டீல் அரசியலை நாங்கள் நன்கு அறிவோம் என்றார்.

## குற்றத்தடுப்புப்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உத்தரவுக்கமைய வவுனியா, பூந்தோட்டம் புனர்வாழ்வு நிலையத்திற்கு 6 மாத காலப் புனர்வாழ்வுக்காக அனுபப்பட்டிருந்தார். அதில் 4 மாதங்கள் நிறைவடையில் நிலையில் அவரைப் பார்வையிடுவதற்காக குருநாகல் பகுதியில் உள்ள பொலிஸ் நிலையம் ஒன்றில் குற்றத்தடுப்பு பிரிவில் உப பொலிஸ் பரிசோதகராகக் கடமையாற்றும் தந்தையும், பொலிஸ் கொன்ஸ்டபிளாகக் கடமையாற்றும் தாயும் சனிக்கிழமை வருகை தந்துள்ளனர்.

புனர்வாழ்வு நிலையத்திறகுள் சென்று தமது மகனை பார்வையிட்டபோது அவர்கள் இருந்த இடத்தை நோக்கிப் பொலிஸ் மேப்ப நாய் சென்றது என்றும், அதை அவதானித்த தந்தை எதனையோ எடுத்து வீசினார் என்றும் புனர்வாழ்வு நிலைய அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

மோப்ப நாயின் உதவியுடன் அந்தப் பொதியைச்சோதனையிட்டபோது அதில் 240 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருள் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டதாகவும் அவர்கள் கூறுகின்றனர்.

மோப்ப நாய் மீண்டும் உப பொலிஸ் பரிசோதகரையும் அடையாளம் காட்டிய நிலையில்அவர்கைதுசெய்யப்பட்டு, வவுனியா பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர். மேலதிக விசாரணைகளின் பின் குறித்த உப பொலிஸ் பரிசோதகரை நீதிமன்றில் முற்படுத்த பொலிசார் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

## ஆளும் தரப்பினது....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேச்சு தோல்வியடையவில்லை. அரசியல் கூட்டணி குறித்த பேச்சு துரிதமாக நிறைவடையக் கூடியவையும் அல்ல. எமது பேச்சு உள்ளூராட்சிமன்றத் தேர்தலை மாத்திரம் இலக்காகக் கொண்டதும் அல்ல. அதனைத் தொடர்ந்து இடம்பெறவுள்ள மாகாணசபை, ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தல்களையும் இலக்காகக் கொண்டது. எனவே பேச்சு பொறுமையாக முன்னகரும். அதற்கமைய ஐ.தே.கவில் சிலர் எம்முடன் இணையலாம். சிலர் அதனை நிராகரிக்கலாம். தற்போது எதையும் உறுதியாகக் கூற முடியாது.

எவ்வாறிருப்பினும் பொதுத் தேர்தலில் ஜே.வி.பி. பெற்றுக் கொண்ட 68 இலட்சம் வாக்குகளை இம்முறை பெற முடியாது என்பதை உறுதியாகக் கூற முடியும் என்றார்.

## ஆர்.ரி.ஐ. .....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு ஆணையரை அரசமைப்புச் சபையின் பரிந்துரைக்கிறது, அதே நேரத்தில் 'வெளியீட்டாளர்கள், பத்திரிகை ஆசிரியர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள்' பிரதிநிதிஒருவரும் 'சிவில்சமூகஅமைப்புகளின்' பிரதிநிதிஒருவரும்தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். மீதமுள்ளஇரண்டுநியமனங்கள்அரசமைப்புச் சபையின் பொதுவான பரிந்துரையின் பேரில் ஜனாதிபதியால் செய்யப்படுகின்றன.

ஆணையம் தனது கூட்டங்களை நடத்தக் குறைந்தது மூன்று உறுப்பினர்களின் கோரம் தேவைப்படுகிறது, தலைவரை ஜனாதிபதி நியமிப்பார். ஆணையர்கள் ஒரு நிலையான ஐந்தாண்டு காலத்திற்குப் பதவி வகிக்கிறார்கள், இருப்பினும் குறிப்பிட்ட காரணங்களுக்காக சபையின் பரிந்துரையின் பேரில் அவர்கள் பதவி விலகலாம் அல்லது ஜனாதிபதியால் நீக்கப்படலாம்.

## கைது செய்த....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

(வயது 44) என்பவரே கைது செய்யப்பட்டுத் தாக்கப்பட்டுள்ளார் என்று அவரது மனைவி குற்றஞ்சாட்டியுள்ளார்.

பொலிஸாரால் கைது செய்யப்பட்டுத் தாக்கப்பட்ட பின்னர் மூதூர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட லிங்கேஸ்வரன் சனிக்கிழமை பிணையில் விடுவிக்கப்பட்டார். அதன் பின்னர் சிகிச்சைக்காக மூதூர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட அவர், மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை வைத்தியசாலைக்கு மாற்றபப்பட்டார்.

கிளிவெட்டி குமாரபுரம் பகுதியில் 24.02.2025 அன்று ஏற்பட்ட விபத்து ஒன்றின்பின்னர் இடம்பெற்ற வன்முறைகளில் தொடர்புபட்டார் என்ற சந்தேகத்தின் பேரில் லிங்கேஸ்வரன் மூதூர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டிருந்தார்.

தனதுகணவர்பொலிஸ்காவலில்வைத்துத் தாக்கப்பட்டது குறித்து மனைவியினால் வெள்ளிக்கிழமை திருகோணமலை பிராந்திய மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டது. இதன் பின்னர் மனித உரிமை அதிகாரிகள் நேரில் சென்று அவரைப்பார்வையிட்டதுடன் மூதூர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியிடம் மருத்துவ அறிக்கை சமர்ப்பிக்குமாறும் கோரியுள்ளனர்.

கடந்த 24.02.2025 அன்று குமாரபுரம் பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்தின் பின்னர் ஏற்பட்ட கைகலப்பின் காரணமாக தெகிவத்தை பகுதியில் இருந்து 30க்கும் மேற்பட்ட பெரும்பான்மை இனத்தைச்

தொடர்ச்சி 8 ம் பக்கம்.....

காலைக்கதிர்
Kalaikkathir

# பெண்களின் திறமை மற்றும் சேவைக்கு உரிய அங்கீகாரம் வழங்க வேண்டும்

## கபே அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் தெரிவிப்பு



வேட்புமனுவிண்ணப்படிவங்களின்வெற்றிடத்தை பூர்த்திசெய்வதாகஅல்லாது பெண்களின்திறமைக்கும் அவர்களது சேவைக்கும் உரிய அங்கீகாரத்தை வழங்குவதை இம்முறை நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபை தேர்தல் உறுதிசெய்ய வேண்டும் என வலியுறுத்தியுள்ள கபே அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் முகமட் மனாஷ் மகீன், பெண்களின் டியிற்றல் பாதுகாப்பு மற்றும் ஊடகப் பாதுகாப்பை அரசியல் கட்சிகளும் துறைசார் அமைச்சும் உறுதிப்படுத்துவது அவசியம் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

கலாநிதி ரஸ்மின் சிறப்பு அதிதியாக கலந்து சிறப்பித்த இந்த பெண்களுக்கான டியிற்றல் மற்றும் ஊடகப் பாதுகாப்பை மையப்படுத்திய 3 நாள் பயிற்சிபட்டறைநிகழ்வானது யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் விடுதி ஒன்றில் சனிக்கிழமை ஆரம்பமானது.

வரும் 10 ஆம் திகதி வரை முன்னெடுக்கப்படவுள்ள நிலையில் குறித்த நிகழ்வின் ஆரம்ப நாளான சனிக்கிழமை பிரதம அதிதியுடன் இணைந்து நிகழ்வை ஆரம்பித்து வைத்தபின் ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் இவ்வாறு தெரிவித்திருந்ததுடன் அவர் மேலும் கூறுகையில் -

எமது அமைப்பால் பல்வேறு பயிற்சிப்பட்டறைகள் மற்றும் திட்டங்களை பெண்களுக்காக மேற்கொண்டுள்ளபோதும் இணைய உலகில் பெண்களிடையே இருக்கும் ஆற்றல்களை செழுமைப்படுத்திஇன்றையஉலகின்வேகத்துக்கேற்ப புதியஉத்வேகத்துடன்அவர்களைவெளிக்கொணரும் களத்தை உருவாக்கும் முயற்சியாவே குறித்த நிகழ்வு முன்னெடுக்கப்படுகின்றது.

குறிப்பாக நாடளாவிய ரீதியில் அரசியல் பிரவேசத்தை முன்னெடுக்கவுள்ள அல்லது அரசியல் நீரோட்டத்தில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்ற பெண்கள் நவீன உலகின் தேவைக்கேற்ப ஆற்றலுள்ளவர்களாக பரிணமிக்க வேண்டியது அவசியம்.

அதற்காக அவர்கள் தங்களை இன்றைய நவீன தொழில் நுட்பம் மற்றும் சமூக ஊடகங்களின் பக்கமும் ஈடுபடுத்திக் கொள்வது அவசியமாகும். இதில் 'கபே' அமைப்பு நாடு முழுவதும் இவ்வாறான திட்டங்களை பெண்களிடையே கொண்டுசென்று அதில் வெற்றியும் கண்டுள்ளது.

இந்நிலையில்சமூகஊடகபங்களிப்பிலும் பெண்களின் வகிபாகம் முதன்மை வகிக்க வேண்டும் என்ற நோக்கில் குறித்த நாடு முழுவதும் அரசியலில் ஈடுபட்டுள்ள பெண்களுக்கான டியிற்றல் மற்றும் ஊடக பாதுகாப்பு தொடர்பான பயிற்சிப்பட்டறை ஒன்றை முன்னெடுத்துள்ளது. அதன் ஓர் அங்கமாகவே யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நடைபெறும் இந்த நிகழ்வு அமைகின்றது.

இதேநேரம் பெண்களின் டியிற்றல் பாதுகாப்பு மற்றும் ஊடகப் பாதுகாப்பை அரசியல் கட்சிகளும் துறைசார் அமைச்சும் உறுதிப்படுத்துவது அவசியம். அத்துடன் கூகுள் உள்ளிட்ட சமூக ஊடக நிறுவனங்களும் இதை உறுதி செய்வதற்கு தமது ஒத்துழைப்பகளை வழங்க வேண்டும். அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

இதேநேரம் நடைபெறவுள்ள உள்ளூர் அதிகார சபைத் தேர்தலில் வேட்பு மனுக்களின் போது வேட்புமனுவில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்காக என்ற போர்வையில் பெண் வேட்பாளர்களை உள்ளீர்க்க வேண்டாம் என நாம் அனைத்து அரசியல் கட்சிகளிடம் கோரிக்கை விடுகின்றோம்.

குறிப்பாக பெண்களின் பங்களிப்பை தேவைக்கானதாக எடுத்துக் கொள்ளாது அவர்களது திறமைகளினதும் மக்கள் மத்தியில் அவர்கள் ஆற்றிய சேவைகளினதும் அடிப்படையில் முன்னிறுத்து கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் பெண்களுக்கு வாய்ப்புக்களை கொடுக்க முன்வர வேண்டும்.

இதேவேளை பெண்களின் டிஜிற்றல் பாதுகாப்பு மற்றும் ஊடகப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு பல்வேறு காரணங்கள் உள்ளன.

குறிப்பாக பெண்கள் இணையத் திலும் சமூக ஊடகங்களிலும்பல்வேறுவகையானவன்முறைகளுக்கு ஆளாகின்றனர். சைபர் குற்றங்கள், ஒன்லைன் துன்புறுத்தல், தவறான தகவல்கள் மற்றும் பாலியல் ரீதியான துன்புறுத்தல்கள் இவற்றில் முன்னிலை பெறுகின்றன

இவ்வாறு ஊடகங்களில் பெண்களை தவறாக சித்திரிப்பது மற்றும் தவறான தகவல்களை பரப்புவது போன்றவை பெண்களின் பாதுகாப்பை பெரிதும் கேள்விக்குறியாக்குகின்றன.

குறிப்பாக இவ்வாறான டிஜிற்றல் மற்றும் ஊடக வன்முறைகள் பெண்களின் உரிமைகளை மீறுகின்றன. இந்நிலையில் பெண்களின் கருத்து சுதந்திரம், தனிப்பட்ட பாதுகாப்பு மற்றும் சமத்துவமான பங்கேற்பு போன்ற உரிமைகளை பாதுகாக்க வேண்டியது அவசியமாகும்.

பெண்கள் பாதுகாப்பாகவும் சுதந்திரமாகவும் இணையத்தைப் பயன்படுத்தும்போது, அவர்கள் சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்கு மட்டுமல்லாது அரசியல் பிரவேசத்தினூடாகவும் தமது மக்களுக்கு பங்களிக்க முடியும்.

இந்நிலையில் பெண்களின் பாதுகாப்பான ஊடக பங்கேற்பு, சமூக விழிப்புணர்வை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதற்கான முயற்சியாகவே இந்த பயிற்சிப் பட்டறை அமைகின்றது.

எனவே, அரசியல் கட்சிகளும் துறைசார் அமைச்சு மட்டுமல்லாது ஊடகங்களும் இணைந்து செயற்பட்டு, பெண்களின் டிஜிற்றல் பாதுகாப்பு மற்றும் ஊடகப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது அவசியமாகும் என்றும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# யாழ். தலைமைப் பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரிக்கு மாற்றம்

கடந்த சில தினங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம் தலைமைப் பொலிஸ் நிலையத்தின் பதில் பொறுப்பதிகாரியின் மகன் ஒருவர் இலஞ்சம் பெற்றதாக யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸாரிடம் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

முறைப்பாட்டினை செய்தவர் கடந்த சில தினங்களுக்கு முன்னர் மது போதையில் வாகனம் செலுத்தி சென்ற போது யாழ்ப்பாணம் பொலிஸாரால் அவருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இந்நிலையில், குறித்த வழக்கை இல்லாது செய்வதற்காக யாழ்ப்பாணம்தலைமை பொலிஸ்நிலைய பதில் பொறுப்பதிகாரியின் மகன் 20 ஆயிரம் ரூபா இலஞ்சம் பெற்றிருந்தார்.

இருப்பினும், கொடுத்த வழக்கு நீதிமன்றத்திற்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் முறைப்பாட்டாளருக்கு 20 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

இவ்வாறான, பின்னணியில் தலைமை பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரியின் மகனுக்கு எதிராக முறைப்பாடு செய்யப்பட்ட போதும் பொலிஸார் குறித்த விடயத்தை நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு செல்லவில்லை. இந்த விடயமானது சனிக்கிழமை மீண்டும் ஊடகங்களில் பேசுபொருளாகியது.

இவ்வாறான, பின்னணியில் குறித்த பொலிஸ் அதிகாரிக்கு உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் முல்லைத்தீவுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் திலக் தனபாலவால் இந்த இடமாற்றம் வழங்கப்பட்டது.

# உள்நாட்டு துப்பாக்கிகளுடன் வவுனியாவில் 5 பேர் கைது

உள்நாட்டு துப்பாக்கிகள் மற்றும் கஞ்சா போதைப் பொருளுடன் ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து வவுனியா, பாவற்குளம் படிவம் 2 பகுதியில் சோதனை மேற்கொண்டனர்.

இதன்போது, உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கிகள், இரண்டு இடத்தில் இருந்து மீட்கப்பட்டதுடன், அதனை உடைமையில் வைத்திருந்த ஒருவரிடம் இருந்து 2 கிராம் கஞ்சா மற்றும் இரண்டு மான் கொம்புகளும் மீட்கப்பட்டன. இதனையடுத்து அதனை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் அப் பகுதியைச் சேர்ந்த 32 மற்றும் 27 வயதுடைய இரு இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

அத்துடன், நீதிமன்றால் இரண்டு பிடிவிறாந்து விதிக்கப்பட்ட நிலையில் தலைமறைவாக இருந்த 25 வயதுடைய இளைஞர் ஒருவரும் இதன்போது கைது செய்யப்பட்டார். குறித்த மூவரும் வவுனியா மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டு உளுக்குளம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

மேலும், வவுனியா, கோவில்குளம் பகுதியில் மாடு திருடிய சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில் நீதிமன்றின் வழக்கு விசாரணைக்கு ஆஜராகாத காரணத்தினால் பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்ட பாவற்குளம் படிவம் 2 பகுதியைச் சேர்ந்த மேலும் இருவரும் இதன்போது மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டு வவுனியா பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட நபர்களிடம் மேலதிக விசாரணைகளின் பின் உளுக்குளம் மற்றும் வவுனியா பொலிஸார் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தேசபந்து எழுப்பும் சவால்

நீதிமன்றத்தின் உத்தரவை நிறைவேற்றுவதற்காக முன்னாள் பதில் காவல் மா அதிபரைக் கைது செய்ய முடியாது திணறி வருகின்ற கையாலாகாத்தனம் ஆளும்தரப்பினர் மீது கடுமையானவிமர்சனங்களைஉருவாக்கத்தொடங்கியிருக்கிறது. குற்றவாளிகளைப் பாதுகாக்கும் அல்லது அவர்களுக்குத் தண்டனை விலக்களிக்கும் இலங்கை ஆளும்தரப்புக்களின் போக்கிலிருந்து இந்த ஆட்சியாளர்களும் மாறபடவில்லை என்கிற குற்றச்சாட்டையும் இது எழுப்பத் தொடங்கியிருக்கிறது.

முன்னாள்பதில்காவல்மாஅதிபர்தேசபந்துதென்னக்கோன் முன்னாள் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரிரான் அலஸுக்கு நெருக்கமானவர் என்றும் அரசுத் தலைவர் அநுரகுமார முன்னாள் அமைச்சருக்கு நெருக்கமானவர் என்றும் இவர்கள் அனைவரும் நண்பர்கள் என்பதாலேயே தேசபந்து கைது செய்யப்படவில்லை என்றும் முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்க குற்றஞ்சாட்டியுள்ளார்.

அதுமட்டுமன்றி உயிர்த்த ஞாயிறு குண்டு தாக்குதல், மத்திய வங்கியின் பிணைமுறி மோசடி மற்றும் கடந்த ஆளும்தரப்பில் இருந்த நாடாளுமன்ற அமைச்சர்களுக்கு எதிரான பண மோசடி தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்கும் நோக்குடன் ஆட்சிக்கு வந்த ஆளும்தரப்பு முன்னாள் பதில் காவல் மா அதிபரைக் கைது செய்ய முடியாத பரிதாப நிலையில் உள்ளதாக மருத்துவ மற்றும் சிவில் உரிமைகளுக்கான மருத்துவர்களின் தொழிற்சங்க கூட்டமைப்பின் தலைவர் வைத்தியர் சமல் சஞ்சீவ விமர்சித்துள்ளார்.

"முன்னாள்பதில்பொலிஸ்மாஅதிபர்தேசபந்துதென்னகோன் விடயத்தில் ஆளும்தரப்பின் நிலைப்பாடு பொதுமக்களிடையே பெரும் குழப்பத்தை விளைவித்துள்ளது. உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல், மத்திய வங்கியின் பிணைமுறி மோசடி, கடந்த ஆளும்தரப்பில் இருந்த நாடாளுமன்ற அமைச்சர்களுக்கு எதிரான பண மோசடி தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்கும் நோக்குடன் ஆட்சிக்கு வந்த ஆளும்தரப்பு முன்னாள் பதில் பொலிஸ்மா அதிபரைக் கைது செய்ய முடியாத பரிதாபநிலையில் உள்ளது.

பதில் பொலிஸ் மா அதிபர் என்பவர் இந்நாட்டின் சாதாரண பிரஜை ஒருவர் அல்லர். எனினும் ஆளும்தரப்பால் அவர் தொடர்பான தகவலை அறிந்துக் கொள்ளவோ அவரைக் கைதுசெய்வதற்கோ முடியாத நிலையில் உள்ளது.

மேலும் தற்போதைய ஆளும்தரப்பு ஆட்சிக்கு வரும்போது கடவுச்சீட்டு, ஈ–விசா உள்ளிட்ட பலசர்ச்சைக்குரிய பிரச்சினைகள் நிலவிவந்தன. ஆயினும் ஆளும்கட்சியோ, எதிர்கட்சியோ அவை தொடர்பில் கவனம் செலுத்துவதாகத் தெரியவில்லை.

ஆளும்தரப்பு வழமை போல குற்றவாளிகளை பாதுகாத்து ஆட்சிக்கு இடையூறு ஏற்படும்போது குற்றவாளிகளை ஒழிக்கும் செயற்பாடுகளில் ஈடுபடக்கூடாது.

தேசபந்து தென்னகோனின் தலைமறைவு ஆளும்தரப்பின் நிலைப்பாடு, சட்ட ஒழுங்குமுறை மற்றும் இந்நாட்டு பாதுகாப்பு துறை மீதான சந்தேகத்தை வலுப்படுத்தும் வகையில் உள்ளது. ஆகையால் இவ்வாறான கெடுபிடியிலிருந்து தற்போதைய ஆளும்தரப்பைக் காப்பாற்றுவதற்காக, குறைந்தபட்சம் நீதிமன்றத்தில் வந்து முன்னிலையாகுமாறு முன்னாள் பொலிஸ்மா அதிபரிடம் கோரிக்கை விடுக்கிறேன்" என்றார் சஞ்சிவ.

தேசபந்துதென்னக்கோனைக்கைதுசெய்யமுடியாதுதிணறும் சட்டம் ஒழுங்குக் காவலர்களின் நிலை ஆளும்தரப்பை மேலும் தர்மசங்கடங்களுக்குஉள்ளாக்கும். பிரச்சினைகளைவளர்க்கும். மக்களிடம் ஆட்சியாளர்களுக்கு எதிரான மனப்போக்கை வளர்க்கும். ஆட்சியாளர்கள் மீதான சந்தேகத்தையும், ஆட்சி மாற்றம் பயனற்றதோ என்கிற சந்தேகத்தையும் வலுக்க வைக்கும். தேசபந்து போன்ற நன்கறியப்பட்ட நபர்களையே கைது செய்ய முடியாத காவல்துறையினர் எப்படி பாதாள உலகக் குற்றவாளிகளைக் கைது செய்யப்போகிறார்கள் என்கிற சந்தேகத்தையும் ஏற்படுத்தும்.

காவல்துறைசுயாதீனத்தில்ஆளும்தரப்புதலையிடுவதில்லை என்ற காரணத்தைக் கூறி இந்த விடயத்தில் ஆளும்தரப்பு தப்பிக்கொள்ள முடியாது. ஒன்றில் காவல்துறை அவரைக் கைது செய்யவேண்டும், இல்லையேல் அவர் கைது செய்யப்படமுடியாமைக்கான காவல்துறையின் பலவீனம் குறித்து நாடாளுமன்றத்தில் வெள்ளை அறிக்கை ஒன்றைத் தாக்கல் செய்யவேண்டும்.



## ஜேவிபியின் எழுச்சி குறுகிய காலத்திற்கு மட்-டுமே

**உபுல் ஜோசப் பெர்னான்டோ**

2024இற்கு முன்னர் இலங்கையின் உள்ளூராட்சி வரலாற்றில் ஜே.வி.பி. வென்ற ஒரேஉள்ளூராட்சிநிறுவனம்திஸ்ஸமஹாராம பிரதேச சபை மட்டுமே. 2002ஆம் ஆண்டு உள்ளூராட்சித் தேர்தலில் ஜே.வி.பி. அந்தப் பிரதேச சபையை வென்றது.

ஜே.வி.பி. எப்போதாவது ஆட்சியைப் பிடித்தால் அப்போது எப்படி நடந்துகொள்ளும் என்பதற்கான முன்மாதிரியாக திஸ்ஸமஹாராம பிரதேச சபையை ஆட்சி செய்து காட்டியது. அந்த நேரத்தில், ஜே.வி.பி. திஸ்ஸ பற்றிய செய்திகளை உருவாக்கி அதை ஊடகங்களில் வெளியிட்டது. பிரதேச சபை எவ்வாறு பணத்தை மிச்சப்படுத்துகிறது என்பதைக் காட்டியது. பிரதேசசபைகூட்டுறவுமுறையை எவ்வாறு மீண்டும் செயல்படுத்துகிறது என்பதைக் காட்டியது.

திஸ்ஸ பிரதேச சபையை வென்றது ஜே.வி.பிக்கு ஒரு பெரும் வெற்றியாகும். அது ஜே.வி.பிக்கு சிறந்த நேரம். திஸ்ஸமஹாராம பிரதேச சபையை வென்ற பிறகு, ஜே.வி.பி 2004 பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டணி வைத்துப் போட்டியிட்டது. ஜே.வி.பிக்கு மட்டுமல்ல, முழு நாட்டையும் ஆச்சரியப்படுத்தும் வகையில், ஜே.வி.பி. 39 நாடாளுமன்ற ஆசனங்களைப் பெற்றது.

ஜே.வி.பி.யின் கம்பஹா மாவட்ட வேட்பாளர் விஜித ஹேரத் கம்பஹா விருப்பப் பட்டியலில் முதலிடத்தில் இருந்தார், பண்டாரநாயக்கர்களின் பட்டத்து இளவரசர் அனுராதா இரண்டாவது இடத்தில் இருந்தார்.

ஜே.வி.பியின் எழுச்சியைக் கண்டு, கொழும்பில் உள்ள வணிக சமூகமும் இராஜதந்திர சமூகமும் பயந்தன. வணிகர்கள் ஜே.வி.பியைப் பின்தொடரத் தொடங்கினர். இராஜதந்திர சமூகம் ஜே.வி.பி.யைச் சந்திப்பதற்கு ஆர்வமாக இருந்தது. வணிகர்கள் கருத்தரங்குகளை ஏற்பாடு செய்து, ஜே.வி.பி. தலைவர்களை இலங்கையின் பொருளாதாரம் குறித்து விரிவுரைகளை வழங்க அழைத்தனர். ஜே.வி.பியின் சொற்பொழிவுகளைக் கேட்க அவர்கள் ஆவலுடன் காத்திருந்தனர். ஜே.வி.பி அடுத்த ஆளும்தரப்பை அமைக்கும் அல்லது ஜே.வி.பி. நாட்டின் பிரதான எதிர்க்கட்சியாக மாறும் என்று அவர்கள் உணர்ந்தனர்.

ஜே.வி.பி. எடுத்த அடுத்த பாய்ச்சல் 2005 ஜனாதிபதித் தேர்தலில் ரணிலை தோற்கடித்து மஹிந்தவை வெற்றி பெறச் செய்ததாகும். ஜே.வி.பி. அந்தத் தேர்தல் பரப்புரையை மகிந்தவுக்காக வழிநடத்தியது. மகிந்தா வெற்றி பெற்ற பிறகு, ஜே.வி.பி. விரும்பியபடி மஹிந்தா நாட்டை ஆட்சி செய்வார் என்று அனைவரும் நினைத்தார்கள். மகிந்தாவின் ஆளும்தரப்பில் ஜே.வி.பி.க்கு சக்திவாய்ந்த அமைச்சர் பதவிகள் கிடைக்கும் என்று அனைவரும் நினைத்தார்கள். ஆனால் மஹிந்தா ஜே.வி.பி.க்கு அங்கீகாரம் வழங்கவில்லை.

மகிந்தா ஜே.வி.பி-யை உடைக்கச் சதி செய்கிறார் என்பதை அறிந்த ஜே.வி.பி, ஸ்ரீ.ல.சு.க கூட்டணியிலிருந்து விலகி 2006 உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் தனியாகப் போட்டியிட முடிவு செய்தது. ஜே.வி.பி. அதன் 'உச்சத்தில்' இருந்தபோது 2006 உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் நடத்தப்பட்டன. இருப்பினும், ஜே.வி.பி ஒரே ஒரு உள்ளூராட்சி மன்றத்தை மட்டுமே வென்றது. அது 2002 இல் வென்ற திஸ்ஸ பிரதேச சபை. 2006 உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஜே.வி.பி. படுதோல்வியடைந்தது.

அன்றிலிருந்து, ஜே.வி.பியின் வீழ்ச்சி தொடங்கியது. மகிந்தாவின் ஆளும்தரப்பை விட்டு வெளியேறிய மங்களவுடன் அப்போதைய எதிர்க்கட்சித் தலைவர் ரணில் இணைந்து மகிந்தவின் ஆளும்தரப்பின் வரவு செலவுத் திட்டத்தைத் தோற்கடித்தபோது, ஜே.வி.பி. அதை ஆதரிப்பது குறித்து விவாதித்தார், ஆனால் மகிந்தா ஜே.வி.பி-. ரணில் கூட்டணியை உடைத்தார். விமல் ஜே.வி.பியை விட்டு வெளியேறினார். ஜே.வி.பி. இரண்டு முதல் மூன்று பகுதிகளாகப் பிரிந்து பலவீனமடைந்தது.

2011 உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில், ஜே.வி.பி. 2002 மற்றும் 2006 உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் வென்ற திஸ்ஸ பிரதேச சபையையும் இழந்தது. ஜே.வி.பி. திஸ்ஸ பிரதேச சபையில் மூன்றாவது இடத்திற்குச் சரிந்தது.

இலங்கை அரசியல் வரலாற்றில் ஜேவிபியின் எழுச்சியும் வீழ்ச்சியும் மிகவும் ஆச்சரியமளிக்கிறது.

1971 ஆம் ஆண்டில், ஜே.வி.பி. ஒரு கிளர்ச்சியை நடத்தி, முழு நாட்டையும் பயமுறுத்தியது. ஜே.வி.பி. அதிகாரத்தைக் கைப்பற்றும் என்று இலங்கை மற்றும் வெளிநாடுகளின் மக்கள் நினைத்தனர். ஜே.வி.பி. அதிகாரத்தைக் கைப்பற்ற முடியாவிட்டாலும், ஜேவிபி நாட்டில் ஒரு பெரும் அரசியல் சக்தியாக உருவெடுத்தது. ஆனால் ஜேவிபி அலை நீண்ட காலம் நீடிக்கவில்லை. கிளர்ச்சியை அடக்கிய பிறகு, ஜே.வி.பி. அடங்கிப் போனது. அதன் பிறகு, ஜே.வி.பி. 1982 ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு 200,000 க்கும் மேற்பட்ட வாக்குகளைப்பெற்றுபலவீனமானகட்சியாக மாறியது. ஜனநாயகத் தேர்தல்கள் மூலம்

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

## ஜேவிபியின்...

4ம் பக்கத் தொடர்ச்சி...........

அதிகாரத்தைக் கைப்பற்றும் ஜேவிபியின் கனவு 1982 ஜனாதிபதித் தேர்தலில் தகர்ந்துவிட்டது.

1988இல் ஜேவிபி மீண்டும் எழுச்சி பெற்றது. 1987 இந்திய-இலங்கை ஒப்பந்தத்திற்குப் பிறகு நாட்டில் உருவாக்கப்பட்ட இந்திய எதிர்ப்பு உணர்வுதான் அதற்குக் காரணம். 88, -89ஆம் ஆண்டுகளில் ஜேவிபி ஒரு துண்டு காகிதத்துடன் நாட்டை ஆட்சி செய்தது. ஜேவிபி அதிகாரத்தைக் கைப்பற்றும் நாள் வெகு தொலைவில் இல்லை என்பதை மக்கள் புரிந்துகொண்டனர். ஆனால் இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, யாரும் எதிர்பார்க்காத போது, பிரேமதாச ஆளும்தரப்பு ஜேவிபியை அடக்கி, சோமவன்சாவைத் தவிர முழு ஜேவிபி அரசியல் தலைவர்களையும் கொன்றது.

ஜேவிபி அடிமட்டத்திலிருந்து எழவில்லை, பல ஆண்டுகளாக அது அங்கிருந்து சரிந்தது. ஜேவிபி 1989இல் வீழ்ந்தது. 2000 பொதுத் தேர்தலுடன் ஜேவிபி மீண்டும் உயரத் தொடங்கியது. ஜேவிபி 2004 பொதுத் தேர்தலுடன் மலையின் உச்சியை அடைந்தது. ஆனால் ஜேவிபி வசந்தம் நீண்ட காலம் நீடிக்கவில்லை. 2006 க்குப் பிறகு, ஜேவிபி வீழ்ச்சி மீண்டும் தொடங்கியது.

### ‘ஜேவிபி வசந்தம் ஏன் குறுகிய காலத்திற்கு மட்டுமே?’

அதை எப்படிச் சொல்வது என்று எனக்குத் தெரியவில்லை, ஆனால் ஜேவிபியின் எழுச்சி எப்போதும் ஒரு ‘சோடா’ பாட்டில் போன்றது. ஜேவிபி மற்ற கட்சிகள் எழுவது போல் எழுவதில்லை, ஆனால் ஒரு பெரிய மேகம் போல எழுகிறது.

2022 ‘அரகாலய’த்திற்குப் பிறகு ஜேவிபி அப்படி உயர்ந்தது. ‘அரகாலய’த்திற்கு முன்பு, மக்கள் ஜேவிபியை 3% கட்சி என்று கேலி செய்தனர். ஆனால் போராட்டத்திற்குப் பிறகு, ஜேவிபி சுனாமி போல வந்தது.

இருப்பினும், 2024 ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் ஜேவிபி அலையைப் போல ஒரு பெரிய அலையைக் காட்டவில்லை. அனுரவுக்கு 42% மட்டுமே பெற முடிந்தது. இலங்கை ஜனாதிபதித் தேர்தல் வரலாற்றில் எந்த ஜனாதிபதியும் 50% க்கும் குறைவாகப் பெற்றதில்லை.

1988 ஜனாதிபதித் தேர்தலில், ஜே.வி.பி பயங்கரவாதத்திற்கு மத்தியில் பிரேமதாச 50% வாக்குகளைப் பெற்றார். அனுரவின் ஆணை 42% ஆகும். 2024 பொதுத் தேர்தலில் அது ஒரு சிறந்த ஆணை ஆனது. இதற்கு முக்கிய காரணம், தோல்வியடைந்த கட்சிகள் ஜே.வி.பி-க்கு சவால் விடாமல் மறைந்திருந்தன. ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் பொதுஜன பெரமுனவும் பொதுத் தேர்தல் பரப்புரைகளை நடத்தவில்லை, மாறாக ஒரு பிரதேச சபைத் தேர்தல் பிரச்சாரத்தை மேற்கொண்டன. இலங்கையில் மிகவும் சக்திவாய்ந்த அரசியல்வாதிகள் ஜே.வி.பி-யின் பெரும் அரசியல் சுனாமியிலிருந்து தங்களைக் காப்பாற்றிக்கொள்ளத் தோல்விக்குப் பயந்து தேர்தல் பரப்புரையிலிருந்து விலகினர். ஜே.வி.பி மலையின் உச்சியில் ஏறி 2024 பொதுத் தேர்தலில் கொடி நாட்டியது.

### ‘அந்த அலையும் 1971, 1988, 2004 அலைகளைப் போல இருக்குமா..?’

சரியாகக் கருத்துத் தெரிவிக்க இயலாது. 1971, 1988 மற்றும் 2004 போலல்லாமல், இன்று ஜே.வி.பி.க்கு ஜனாதிபதி பதவியும் ஆளும்தரப்பில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையும் உள்ளது. இந்த அலையில் நீண்ட காலம் நீந்துவதற்கு ஜனாதிபதி பதவியும் ஆளும்தரப்பும் ஜே.வி.பி-க்குப் பலமாக இருக்கும். இல்லையெனில், 1971, 1988 மற்றும் 2004 ஆம் ஆண்டுகளில் ஜே.வி.பி. அலை முடிவுக்கு வருவதற்கு ஜனாதிபதி பதவியும் ஆளும்தரப்புக் காரணமாக இருக்கும்.

# திருகோணமலை மாவட்டத்தில் ஈ.எம்.எஸ்.விற்பனை ஊக்குவிப்பு





ஈ.எம்.எஸ். விற்பனை ஊக்குவிப்பு திட்ட நிகழ்ச்சியானது இலங்கை தபால் திணைக்களத்தால் திருகோணமலை பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் கே.எம்.எஸ் நாமல் குமார தலைமையில் சனிக்கிழமை திருகோணமலை மாவட்ட அஞ்சல் அலுவலகத்தில் நடைபெற்றது.

குறித்த நிகழ்வானது திருகோணமலை நகர்ப்புறத்தை மையமாகக் கொண்டு அஞ்சல் திணைக்கள அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்கள் அஞ்சல் அலுவலகத்தில் இருந்து நடந்து சென்று ,துண்டு பிரசுரங்களை விநியோகித்தது மட்டுமன்றி ஈ.எம்.எஸ். சேவை குறித்து பொதுமக்களுக்குத் தெளிவுபடுத்தினர்.

திருகோணமலை நகரிலுள்ள வர்த்தக நிறுவனங்கள் மற்றும் பொதுமக்களை இலக்காகக் கொண்டு இந்த விற்பனை ஊக்குவிப்பு நிகழ்ச்சி திட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டது.

தபால் பொருள்களை துரிதமாகவும் பாதுகாப்பாகவும் நம்பிக்கையுடனும் உலகின் பல்வேறு பிரதேசங்களுக்கும் கொண்டு செல்வதற்கு உருவாக்கப்பட்ட சேவையே இதுவாகும்.

தற்போது இலங்கை உள்ளிட்ட 48 நாடுகள் இந்த ஈ.எம்.எஸ். முறையில் பொருள்களைப் பரிமாற்றிக் கொள்கின்றமை குறிப்பிடத்தக்கது.

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd

தொடர்புகளுக்கு: 0777 43 5557

காலைக்கதிர்
Kalaikkathir

# கிளிநொச்சி மாவட்ட கடினப்பந்து அணிகள் மோதும் ஜனகன் சுற்றுகிண்ண அறிமுகம்







நாட்டில்இடம்பெற்றஇறுதிப்போரின்போது காணாமல் ஆக்கப்பட்டவர்களை இன்னும் தேடி கொண்டிருக்கும் வேலையில் பாடசாலை மாணவர் பலர் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் ஒருபுரம் இராணுவத்தினரின் கையில் புனர்வாழ்வுக்கு ஒப்படைக்கப்பட்டவர் பலர் இருந்தபோதும் 2009 முற்பட்ட காலங்களின் கிளிநொச்சிமகாவித்தியாலயத்தின்துடிப்புமிக்க இளைஞனாகவிளையாட்டிலும்சரிகல்வியிலும் சரி ஒழுக்கத்திலும் பன்பானவனாகவும் விழங்கியவன் தான் ப.நடேசன் ஜனகன் அந்த சிறுவன் அவன் வேறும் யாரும் இல்லை தமிழீழ காவல்துறை பொறுப்பாளராகவும் அரசியல்துறை பொறுப்பாளராகவும் இருந்த ப.நடேசன் அவர்களின் அன்பு மகன் ஜனகன்.

நடேசன்ஜனகன்நினைவுகளைதாங்கியவாறு கிளிநொச்சி மகா வித்தியாலய பழைய மாணவர்களின் மகாதீபம் விளையாட்டுக் கழகத்தை அறிமுகப்படுத்தி அக் கழகத்துக்கு நடேசன் ஜனகன் சுற்று கிண்ணத்தை அறிமுகப்படுத்தும் நிகழ்வு சனிக்கிழமை இரவு கிளிநொச்சி மகா வித்தியாலய பழைய மாணவர்களால் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்த அறிமுக விழாவில் இன்னால் பள்ளியின் முதல்வர் இளவேந்தி முந்நாள் பள்ளி முதல்வர்கள் யோகநாதன், சிறிதரன், பங்கையச்செல்வன், ஜனகனின் நினைவுகளை தாங்கிய ஆசிரியர்கள், மாணவர்கள், நிகழ்வின் பங்குதாரார்கள் மற்றும் ஏனைய களகங்கள் என பலர் கலந்து கொண்டார்கள். 113






# கல்சியம் நீக்கி திரவத்தை அருந்தியவர் யாழில் சாவு

யாழ்ப்பாணத்தில் கல்சியம் நீக்கி திரவத்தை அருந்திய நபர் ஒருவர் சனிக்கிழமை யாழ்ப்பணம் போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

கச்சாய் தெற்கு, கொடிகாமம் பகுதியைச் சேர்ந்த 64 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில் -

குறித்த நபர் வெள்ளிக்கிழமை அவரது வீட்டில் இருந்த கல்சியம் நீக்கி திரவத்தை அருந்தியுள்ளார். இதனையடுத்து அவர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனை வைத்தியசாலையில் சேர்ப்பிக்கப்பட்டார்.

இருப்பினும் சிகிச்சை பலனின்றி சனிக்கிழமை உயிரிழந்துள்ளார். அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டுள்ளார்.

# இப்தார் வைபவம்

(நூருல் ஹுதா உமர்)

மாளிகைக்காடு ஜனாஸா நலன்புரி அமைப்பு ஏற்பாடு செய்த வருடாந்த இப்தார் வைபவம் அமைப்பின் தலைவர் ஏ.எம்.தஸ்மீன் தலைமையில் அமைப்பின் வளாகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வின் மார்க்க சொற்பொழிவை மாளிகைக்காடு அந்-நூர் ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் பேஷ்இமாம் ஏ.எல்.எம்.மின்ஹாஜ் (உஸ்மானி) நிகழ்த்தினார்.

மேலும் இந்நிகழ்வில் மாளிகைக்காடு ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் தலைவர் ஏ. பௌசர், சாய்ந்தமருது-மாளிகைக்காடு உலமா சபை கிளையின் தலைவர் ஏ.எல்.எம். சலீம் (சர்க்கி) உட்பட உலமாக்கள், சாய்ந்தமருது ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் செயலாளர் எந்திரி எம்.எம்.எம். முனாஸ், மாளிகைக்காடு கிராம உத்தியோகத்தர் ஏ.எம். நஜீம், ஜும்மா பள்ளிவாசல்களின் நிர்வாகிகள், நம்பிக்கையாளர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், சாய்ந்தமருது ஜனாஸா நலன்புரி மக்கள் பேரவை நிர்வாகிகள், மாளிகைக்காடு ஜனாஸா நலன்புரி அமைப்பின் நிர்வாகிகள், அங்கத்தவர்கள், ஊர் பிரமுகர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.





# பெண்களின் வலிமையே நாட்டின் வலிமை செந்தில்தொண்டமான் மகளிர்தின செய்தி

(நூருல் ஹுதா உமர்)

இந்நாட்டின் ஒவ்வொரு வளர்ச்சிக்கு முன்பும் பின்பும் பெண்கள் இருக்கிறார்கள். பன்முக திறமைகள் கொண்ட பெண்கள் இந்த சமுதாயத்தில் உருவாக்கிய மாற்றங்கள் அதிகம். பெண்களுக்கான சம உரிமை மற்றும் பொருளாதார சுதந்திரமே ஒரு சமூகத்தின் வெற்றியாக பார்க்கப்படுகிறது என்று தெரிவித்த இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான், அனைத்து துறைகளிலும் வெற்றி நடைபோடும் அனைத்து மகளிருக்கும் தன்னுடைய இனிய மகளிர் தின வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.



பெண் என்பவர் இந்த தேசத்தைக் கட்டியமைக்கும் வலிமை கொண்டவர்கள். ஒரு குடும்பத்தை முன்னேற்றவும் நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்துவதிலும் பெண்களின் பங்கு என்பது அளப்பறியது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தனது மகளிர் தின வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ள அவர், ஏனைய நாடுகளுடன் ஒப்பிடப்படுமிடத்து, பெண்களுக்கான வாய்ப்புகள் அதிகளவில் வழங்கப்படும் இடத்தில் இலங்கை காணப்படுகிறது என்றும் அதனால், அனைத்துத் துறைகளிலும் பெண்களின் பிரதிநிதித்துவம் மேலும் அதிகரிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

அனைத்துத் துறைகளிலும் மேலும் சமஅந்தஸ்து பெண்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்று தெரிவித்த அவர், இந்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு மிக முக்கிய பங்குதாரர்களாக பெருந்தோட்டப் பெண்கள் உள்ளனர் என்றும் அவர்களுக்கு உழைப்புக்கு ஏற்ற ஊதியம் வழங்கப்படுவது அவசியம் என்றும் தெரிவித்த அவர் அதனைப் பெற்றுக்கொடுப்பதற்கு இ.தொ.கா முன்நின்றுச் செயற்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

# பொன்விழா இலட்சினை வெளியீடு

(ஜிப்ரான்)

இலங்கைத்திருநாட்டின் பழைமைவாய்ந்த அஹதியாக்களில் ஒன்றாகவும் திருகோணமலை மாவட்டத்தின் முதன்மை அஹதியாவுமான மூதூர் மத்திய அஹதியா தனது 50 ஆவது ஆண்டில் தடம் பதித்திருக்கின்றது.

இந்நிகழ்வை பிரதிபலிக்கும்முகமாக சனிக்கிழமை திருகோணமலை மாவட்ட அஹதியாக்கள் சம்மேளத்தின் தலைவர் அஷ்ஷேஹ் வை. ஹதியதுல்லஹ் மௌலவி அவர்களால் மூதூர் மத்திய அஹதியாவின் பொன்விழா இலட்சினையானது வெளியீடு செய்யப்பட்டது.

இந்த நிகழ்வில் மூதூர் மத்திய அஹதியாவின் தலைவர் எ.ம்.அர்ஷத், உப தலைவர் ஹாபில் மௌலவி, செயலாளர் எ.ம்.நுஸ்கி மௌலவி, உப செயலாளர் அயாஸ் மௌலவி மற்றும் ஞாயிறு பாடசாலையின் உப அதிபர் நிஷ்பாக் மௌலவி ஆகியோர் கலந்து கொண்டனர்.



# சிறுபோக செய்கை தொடர்பில் கிளிநொச்சியில் கலந்தாய்வு

வடக்கு மாகாணத்தில் இந்த வருட சிறுபோகச்செயகையில் நவீன தொழில்நுட்பங்களைபயன்படுத்திவிவசாய உற்பத்தியை அதிகரிப்பது தொடர்பான கலந்துரையாடல் வடமாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகம் தலைமையில் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் வடமாகாண பிரதம செயலாளர் ,வடமாகாண விவசாய அமைச்சின் செயலாளர், வடமாகாண நீர்ப்பாசன மற்றும் விவசாய பணிப்பாளர்கள், ஐந்து மாவட்டங்களின் விவசாயப்பணிப்பாளர்கள், நீர்ப்பாசன பொறியியலாளர்கள், விவசாய திணைக்கள உத்தியோகத்தர்கள் ,விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். 316

# சர்வதேச மகளிர் தினம் கிண்ணியாவில்

(ஹலால்தீன்)

'நிலையான எதிர்காலத்தை உருவாக்குவதற்கு அவள் வலுவான வழிகாட்டியாக இருப்பாள்'எனும் தொனிப்பொருளின் கீழ்

கிண்ணியா பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் மகளிர் தின நிகழ்வுகள் சனிக்கிழமை இடம்பெற்றது.

கிண்ணியா பிரதேச செயலகத்தின் மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் அப்துல் மஜீத் சமீனா தலைமையின் கீழ் நடைபெற்ற இந்நிகழ்வில், மகளிர் மகா சங்க உறுப்பினர்களின் பங்களிப்புடன் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் அதிதியாக கிண்ணியா பிரதேச செயலாளர் எச்.எச்.எம் கனி, உதவி திட்டமிடல் பணிப்பாளர் ஐ.முஜீப், மகளிர் சங்கங்களின் உறுப்பினர்கள், மகளிர் மகா சங்க உறுப்பினர்கள் உள்ளிட்ட பெண்கள் பலர் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் தொழில் முனைவோர், சாதனைப் பெண்கள், பெண் தொழில் முயற்சியாளர்கள், கிண்ணியா பிரதேச செயலக அலுவலகத்தின் பெண் அலுவலக உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கௌரவிக்கப்பட்டனர்.

கவிதை, பாடல், நடனம் என கலை, கலாசார நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.











காலைக்கதிர் Kalaikkathir

## கைது செய்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேர்ந்த இளைஞர்கள் தமது கிராமத்திற்குள் நுழைந்து தாக்குதல் மேற்கொண்டிருந்தனர் எனவும் இதன்போது தமது கிராமத்தைச் சேர்ந்தவர்களும் தற்பாதுகாப்பிற்காக திருப்பி தாக்கியதுடன் தப்பியும் ஓடினார்கள் என்றும் கிராமத்தவர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தச் சம்பவத்தை அடுத்து அந்த இடத்திற்கு வருகை தந்த மூதூர் பொலிஸார் தெகிவத்தைப் பகுதியைச் சேர்ந்த 4 பேரையும், குமாரபுரம் பகுதியைச் சேர்ந்த 6 பேரையும் கைது செய்தனர். இரு தரப்பிலும் சிலரைத் தேடியும் வந்தார்கள். பின்னர் இருதரப்பினரும் சமாதானமான முறையில் இணக்கப்பாட்டுக்கு வந்த நிலையில் கடந்த 28.02.2025 அன்று கைதுசெய்யப்பட்ட அனைவரும் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இந்நிலையில் வெள்ளிக்கிழமை (7 ஆம் திகதி) பாலர் பாடசாலையில் பிள்ளையை விட்டுவிட்டுத் திரும்பி வரும் வழியில் அவரைக் கைது செய்த மூதூர் பொலிஸார் தனது கணவனை ஓட்டோவில் அழைத்துச் சென்று அவரின் தலை, கை, கால் ஆகிய பகுதிகளில் மிகவும் கொடூரமான முறையில் தாக்கியுள்ளனர் என மனைவி தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

அத்துடன் 30 பேருக்கு மேற்பட்ட சிங்கள இளைஞர்கள் எமது ஊருக்குள் வந்து தாக்குதல் மேற்கொண்டபோதும், வெறும் 4 பேரை மாத்திரம் கைது செய்தனர் என்றும் ஏனையவர்களை கைது செய்யாமலும் குமாரபுரம் மக்கள் மீது தமது அதிகாரத்தை பிரயோகித்து ஒரு பக்கச் சார்பாக பொலிஸார் நடந்து கொள்கின்றனர் எனவும் திருகோணமலை பிராந்திய மனித உரிமைகள் ஆணைக்குழுவில் லிங்கேஸ்வரனின் மனைவியான முனீஸ்வரி முறையிட்டுள்ளார்.

## 5 வருடங்களின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேல் வீரக்கொடியன பகுதியில் ஒரு தென்னந்தோப்பை வாங்கி அங்கு வசித்து வந்த குறித்த நபர், 2020 செப்டம்பர் முதல் பிடிபடாமல் தப்பி வந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் இல்லாமல் நடந்த கொலை வழக்கு விசாரணையில் பாணந்துறை மேல் நீதிமன்றம், அவரை குற்றவாளி எனக் கண்டறிந்து 2020 ஜனவரி 31 தூக்குத் தண்டனை விதித்தது.

இவர் சிலாபம் பகுதியில் வசிப்பதாக சமீபத்தில் நிறுவப்பட்ட மத்திய குற்றப் புலனாய்வுப் பணியகத்திற்கு தகவல் கிடைத்ததாகவும், சிலாபம் தென்னந்தோப்பில் வைத்து குற்றவாளியைத் தாம் கைது செய்தனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

## பெண்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உள்ளு-ராட்சி சபைத் தேர்தலுக்காக தற்போது அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் வேட்பாளர்களினால் கட்டுப்பணம் செலுத்தப்பட்டு வருகின்றது. மார்ச் 17 (திங்கட்கிழமை) முதல் மார்ச் 20 ( வியாழக்கிழமை) நண்பகல் வரை வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

இதற்கான அறிவிப்பு மற்றும் ஆலோசனைகள் சகல தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கும், மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர்களுக்கும் விடுக்கப்பட்டுள்ளன.

336 பிரதேச சபைகளுக்கு தொகுதி அடிப்படையில் 4872 உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக இம்முறை தேர்தல் நடத்தப்படுகிறது. 2024ஆம் ஆண்டுக்கான தேருநர் இடாப்பின் பிரகாரம் 1 கோடியே 71 இலட்சத்து 40,354 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

தபால்மூலவாக்களிப்புக்கானவிண்ணப்பம் தற்போது கோரப்படுகிறது. மார்ச் 12 விண்ணப்பம்கோரல்நிறைவடையும். ஆகவே சரியானதகவல்களுடன்விண்ணப்பிக்குமாறு தேர்தல் பணிகளில் ஈடுபடவுள்ள அரச அலுவலர்களிடம் வலியுறுத்துகிறோம்.

அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் வேட்புமனுத்தாக்கலின்போது பெண்களுக்கான 25 சதவீத ஒதுக்கீடு மற்றும் இளைஞர்களுக்கான இட ஒதுக்கீடு குறித்து விசேட கவனம் செலுத்த வேண்டும்.

புதிய ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாகப் போட்டியிட உத்தேசித்துள்ள அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் வேட்பாளர்கள் வேட்புமனுபத்திரங்களைச்சமர்ப்பிக்கும்போது தமதுசொத்துமற்றும்பொறுப்புக்கள்தொடர்பான விவரங்களைச் சமர்ப்பித்தல்வேண்டும்.

2023ஆம் ஆண்டு 3 ஆம் இலக்க தேர்தல் செலவினங்களை ஒழுங்குப்படுத்தல் சட்டத்தின்பிரகாரம்வேட்புமனுநிறைவடைந்து ஓரிரு நாட்களில் தேர்தல் பரப்புரைச் செலவு தொடர்பில் அறிவிக்கப்படும். இவ்விடயம் குறித்து அரசியல்கட்சிகள்மற்றும்சுயேச்சைக் குழுக்களின் பிரதிநிதிகளுடன் விரிவாகக் கலந்துரையாடுவோம்.

ஏனைய தேர்தல்களை காட்டிலும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் பணிகள் விரிவானது. ஆகவே வாக்கெடுப்பு தொடர்பான மார்ச் 20க்குப் பின்னரே அறிவிக்கப்படும் என்றார்.

## பாடசாலை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசபந்துவுக்கு எதிரான வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள பொலிஸ் சோதனை நடவடிக்கை சட்டப்பூர்வமாக இடம்பெற்றிருந்தால், முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தலைமறைவாக இருக்க எந்தக் காரணமும் இருக்காது. தற்போதைய ஆளும்தரப்புக்கு அவர் ஒரு முதலாளி கிடையாது.

தேசபந்து தென்னகோனிடம் அதிக அளவு சொத்துக்கள் இருக்கின்றன. அவற்றை அவர் எவ்வாறு பெற்றார் என்பது தெரியாது. தொடர்ந்தும் அவர் தலைமறைவாக இருந்தாரானால் அந்தச் சொத்துக்கள் முடக்கப்படும் - என்றார்.

## சிறப்புரிமை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடத்தில் இந்தக் குற்றச்சாட்டுக்களை முன்வைக்கப்பட்டிருந்தால் உரிய சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்போம் என்று ஸ்ரீ லங்கா பொது ஜன பெரமுனவின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரத்நாயக்க தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் அலுவலகத்தில்ஞாயிற்றுக்கிழமைநடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான கலந்துரையாடலில் கலந்துக்கொண்டதன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசியபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

தேசிய மக்கள் சக்தி பொய் மற்றும் கடந்த ஆட்சிகள்மீதானவெறுப்புஆகியஇரண்டையும் பிரதான கொள்கையாக முன்னிறுத்தி தேர்தல் காலத்தில் செயற்பட்டது. மக்களைத் தவறாக வழிநடத்தியது. சிறந்த மாற்றத்தை எதிர்பார்த்து மக்களும் இதுவரையில் தமக்கு எவ்விதத்திலும் சேவையாற்றாதவர்களைப் பொதுத் தேர்தலில் தெரிவு செய்து நாடாளுமன்றத்துக்கு அனுப்பினார்கள். அவர்களிடம்ஆட்சியதிகாரத்தை முழுமையாக ஒப்படைத்தார்கள்.

மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் அனைத்தும் இன்று பொய்யாக்கப்பட்டுள்ளன. மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு எவ்விதத்திலும் ஆளும்தரப்புத் தீர்வுகளைத் தரவில்லை. இந்த ஆளும்தரப்பு மக்களின் கவனத்தை திசை திருப்புவதற்காக கடந்தகால ஆட்சிகளையும்,75ஆண்டுகாலஅரசியலையும் விமர்சித்துக்கொண்டிருக்கிறது.

'அரகலய' போராட்டதின்போது அரசியல்வாதிகளின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டமை மற்றும் அதற்கு வழங்கப்பட்ட நட்டஈடு பற்றி ஆளும்தரப்புப் பேசுகிறது. ஜேவிபிதான் எமது வீடுகளுக்குத் தீ வைத்தது. ஆளும்தரப்பு நட்டஈடு பற்றிக் குறிப்பிடப்படுகிறதே தவிர வீடுகளுக்கு தீ வைத்தபவர்களின் விவரங்கள் பற்றி பேசுவதில்லை. முடிந்தால்அந்தவிவரத்தையும் ஆளும்தரப்பு வெளியிடவேண்டும்.

கடந்தகால ஆட்சிகள் தொடர்பில் அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ நாடாளுமன்ற சிறப்புரிமையில் இருந்துகொண்டு நாடாளுமன்றத்தில் தொடர்ச்சியாகஅறிக்கைவெளியிடுகிறார். அவர் பொது இடத்தில் இந்தக் குற்றச்சாட்டுக்களை முன்வைத்தால் நாங்கள் உரிய சட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்போம்என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

# அநுர அலை இன்னும் ஓயவில்லை அதை குறைத்து மதிப்பிடமுடியாது

### தமிழ் அரசுக் கட்சி செயலர் தெரிவிப்பு




அநுர அலை இன்னும் குறையவில்லை. அதனைக் குறைத்து மதிப்பிட முடியாது என்று தமிழ் அரசுக் கட்சியின் செயலாளர் சுமந்திரன் தெரிவித்தார். அதேநேரம் இம்முறை உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் கொழும்பில் போட்டியிடுவதில்லை என்றும் கட்சி முடிவு செய்துள்ளது.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் நேற்றுக் காலை முதல் மதியம் வரை வவுனியாவில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியில் இடம்பெற்றது. அதன் பின் வவுனியா, குருமன்காடு காளி கோவில் வீதியில் கட்சியின் அலுவலகம் திறந்துவைக்கப்பட்டது. அங்கு செய்தியாளர்களிடம் பேசிய கட்சியின் பொதுச்செயலாளர், மத்திய செயற்குழுக் கூட்டத்தின் போது உள்ளூராட்சி மன்ற தேர்தல்கள் தொடர்பாகவே முக்கியமாக ஆராயப்பட்டதாகத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கட்சியின் மத்திய செயற்குழு உள்ளூராட்சி மன்ற தேர்தல்களில் போட்டியிடுவது தொடர்பான தீர்மானங்களை ஏகமனதாக எடுத்துள்ளது. அதன்படி வடக்கு - கிழக்கு மாவட்டங்களின அனைத்து உள்ளூராட்சி மன்றங்களிலும் இலங்கை தமிழ் அரசுக் கட்சி தனித்துப் போட்டியிடும்.

இந்தத் தேர்தல் முக்கியமானதொரு தேர்தல். நாங்கள் ஒவ்வொரு தேர்தல்களையும் முக்கியமானதொரு தேர்தல் என்றே கூறி வந்துள்ளோம். உண்மை அதுதான். ஒவ்வொரு தேர்தல்களில் அவ்வக் காலப்பகுதிகளில் வேறு வேறு நோக்கங்களுக்காக முக்கியமான தேர்தலாக இருக்கும். இம்முறை நாடு அநுர அலையில் உள்ளது.

நாடாளுமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி தனிப் பெரும்பான்மையை பெற்றுள்ளது. வடக்கு, கிழக்கில் மட்டக்களப்பு தவிர ஏனைய மாவட்டங்களில் அநுர அலையில் எமது மக்களின் வாக்குகள் சென்றுள்ளது. திருகோணமலையில், மட்டக்களப்பில் நாம் பெரும்பான்மை பெற முடியாது. வடக்கில் நாம் தான் பெரும்பான்மை.

எனினும் மக்கள அநுர அலையில் சிக்கி ஜனாதிபதி தேர்தலைக் காட்டிலும் நாடாளுன்றத் தேர்தலில் அதிக வாக்குளை வழங்கியிருந்தார்கள். ஜனாதிபதித் தேர்தலில் நாம் ஆதரவு வழங்கிய ஐக்கிய மக்கள் சக்தியின் சஜித் பிரேமதாசவே வடக்கு - கிழக்கில் பெரும்பான்மை பெற்றார். ஆனால் நாடாளுமன்றத் தேர்தலில் இந்த நிலை மாறியது.

தற்போது அநுர அலை குறைந்து விட்டது என்கிறார்கள் சிலர். அப்படிக் கூறமுடியாது. அநுர அலை தற்போதும் இருக்கிறது. அது குறைவடைய சில காலம் செல்லலாம். நாம் கவனமாகக் கையாண்டு நாடு அநுரவோடு இருக்கட்டும். நமது ஊர் நம்மோடு. நாம் வீட்டோடு என செயற்படவேண்டும்.

எமது உள்ளூர் அதிகாரங்களை நாம் விடமுடியாது. எனவே நாம் இந்த தேர்தலில் சிறப்பானவர்களை, செல்வாக்குமிக்கவர்களை நிறுத்தவேண்டும். அதன் மூலமே அதிக வெற்றிவாய்ப்பைப் பெறமுடியும். அவ்வாறான தீர்மானங்கள எடுக்கும்அதிகாரத்தை எமது மாவட்ட கிளைகளுக்கு வழங்கியுள்ளோம்.

தேர்தல் முடிந்த பின் ஆட்சி அமைக்கின்றபோது ஏனைய தமிழ் கட்சிகளுடனும் பேசி ஆட்சி அமைப்பதற்கான ஆலோசனைகளும் முன்வைக்கப்பட்டு அது தொடர்பில் பேச்சு நடத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேலும் சில சபைகளின் நிலமையை கருத்தில் கொண்டு ஏனைய தமிழ் கட்சிகளுடன் இணைந்து போட்டியிடலாம் எனத் தீர்மானித்துள்ளோம். அந்தவகையில் வவுனியா வடக்கு, சம்மாந்துறை, ஏறாவூர் ஆகிய பகுதிகளில் ஏனைய தமிழ் கட்சிகளுடன் இணைந்து போட்டியிடுவதற்கான தமிழ் அரசுக் கட்சியின் வாசல் திறந்தே உள்ளது.

வவுனியா வடக்கில் நாம் பிரிந்து செயற்படுவோமாக இருந்தால் பெரும்பான்மையினரிடம் அப் பிரதேச சபை செல்லும் வாய்ப்புள்ளது.

சம்மாந்துறை, ஏறாவூர் ஆகிய பகுதிகளில் எம்மிடம் பெரும்பான்மை இல்லை. ஆகவே இணைந்து போட்டியிடலாம் என தீர்மானத்துள்ளோம். கொழும்பு மாநகர சபையில் தமிழ் மக்கள் வசிக்காத வட்டாரங்களும் உள்ளது. அங்கு வேட்பாளர்களை நியமிப்பது சவாலான ஒரு நிலைமையை ஏற்படுத்தியுள்ளது. அங்கு ஏனைய கட்சிகளுடன் இணைந்து போட்டியிட்டாலும், அதன் வேட்பாளர்களின் பின்புலம் தொடர்பாக ஆராய்வதில் பல்வேறு சவால்கள் உள்ள காரணத்தினால் இம்முறை கொழும்பில் போட்டியிடுவதில்லை என மத்திய செயற்குழு தீர்மானித்துள்ளது - என்றார்.

(100)



காலைக்கதிர் Kalaikkathir

# ஆட்சியாளர்கள் மாறினாலும் காட்சி எதுவும் மாறவில்லை

## வலிந்து காணாமலாக்கப்பட்டோர் சங்கத் தலைவி வேதனை

ஆட்சியாளர்கள் மாறுகின்றபோதும் எவருமே காணாமல் ஆக்கப்பட்டவர்களது விடயம்தொடர்பில்கவனம்செலுத்தவில்லை என திருகோணமலை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் சங்கத்தின் தலைவி நாகேந்திரன் ஆஷா தெரிவித்துள்ளார்.

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு நேற்று (சனிக்கிழமை) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் சங்கத்தின் தலைவி நாகேந்திரன் ஆஷா மேலும் தெரிவிக்கையில் -

புதிய ஆட்சியாளர்கள் மாறிவருகின்றபோதிலும் தமது குரலுக்கு எவருமே செவிசாய்க்கவில்லை. தமது தொடர்ச்சியான போராட்டங்களின்போது தமது பக்கமாக நின்ற அனுர அரசாங்கமானது தற்போது ஆட்சிக்கு வந்த பின்னராக காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விடயத்தில் மௌனம் சாதிக்கின்றது.

காலங்கள் மாறுகின்றபோதிலும் எமது நாட்டில் தொடர்ச்சியாக ஆட்சியாளர்கள் மாறிவருகின்றபோதிலும் காணாமல் ஆக்கப்பட்டவர்களது நிலைமை தொடர்கதையாகவே காணப்படுகின்றது.

காணாமல்ஆக்கப்பட்ட உறவுகளைத்தேடி வீதியில் இறங்கி பெண்கள் தொடர்ச்சியாக போராடிக்கொண்டிருக்கும்இந்தநிலையிலே தற்போது அத்தியாவசிய பொருள்களது விலைகளும் குறைந்தபாடில்லை. ஆகையால் தமக்கு எங்கு பார்த்தாலும் இன்னல்கள் நிறைந்ததாகவே காணப்படுகிறது.

அதுபோலவே வெளிநாடுகளுக்கு பணிப்பெண்களாக வேலைபார்க்கச் செல்லும் பெண்களது நிலமைகளும் அவர்களது பிள்ளைகளது வாழ்வும் தொடர்ச்சியான இன்னல்களை சந்திக்கும் நிலையாகவேகாணப்படுவதுடன்இதிலிருந்து பெண்கள் விடுபட்டு தமது வாழக்கையை நடத்த மிகுந்த சிரமங்களுக்கு உள்ளாக வேண்டிய நிலை காணப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

# கற்பிட்டி கடற்பரப்பின் ஈபான்தீவில் வெளிநாட்டு சிகரட்டுக்கள் சிக்கின

(சியாஜ்)

கற்பிட்டி கடற்பரப்பின் ஈப்பான்தீவு பகுதியில் கடல்வழியாக நாட்டுக்குள் சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட வெளிநாட்டு சிகரெட்டுக்கள் சுமார் 1,60,000 மற்றும் மாத்திரைகள் சுமார் 22,100 என்பன கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கடற்படையினரின் விஷேட தேடுதல் நடவடிக்கையின் போதே ஈபான்தீவு பகுதியில் கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்ட டிங்கி படகை சோதனைக்குட்படுத்திய போதே மேற்படி சிகரட்டுக்கள் மற்றும் மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கற்பிட்டி கடற்பரப்பில் தொடர்ந்து கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் விஷேட ரோந்து நடவடிக்கைகள் காரணமாகவே இவ்வாறு சட்டவிரோதமாக வெளிநாட்டில் இருந்து கொண்டு வரப்பட்ட சிகரட்டுக்கள் மற்றும் மாத்திரைகள் கை விட்டுச் சென்றிருக்கலாம் என சந்தேகிப்பதாக கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

கடற்படையினினால் கைப்பற்றப்பட்ட 1,60,000 சிகரட்டுக்கள் மற்றும் 22,100 மாத்திரைகள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக புத்தளம் பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்பு பிரிவினிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# திருக்கோணேஸ்வர ஆலய திருப்பணி தொடர்பில் இந்தியத் தூதுவராலய உயரதிகாரிகள் கள ஆய்வு



திருகோணமலை திருக்கோணேஸ்வரம் ஆலயத்திற்கு எதிர்காலத்தில் மேள்கொள்ளப்பட திருக்கோணேஸ்வர ஆலய திருப்பணி தொடர்பில் இந்திய துதுவரக உயர் அதிகாரிகள் கள ஆய்வுகளை மேற்கொண்டனர்.

சனிக்கிழமை கள ஆய்வு மேற்கொண்டதுடன், ஆலயத்துக்கு வருகைதந்து பல விடயங்கள் கேட்டறிந்தனர்.

இதன் போது, அகில இலங்கை இந்து மாமன்ற உபதலைவர் கலாநிதி ஆறுதிருமுருகன் ஆலய நிர்வாக சபைத் தலைவர் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.



இந்தியப்பிரதமரிடம் கோணேஸ்வரத் திருப்பணிக்கு உதவுமாறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்ட நிலையில் குறித்த திருக்கோணேஸ்வரம் ஆலயம்தொடர்பில்கவனம் செலுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஆசிரியப் பணி ஓய்வு

(ஹலால்தீன்)



திருகோணமலை வலயத்தின் கோட்டக் கல்விப் பணிப்பாளராக சுமார் 37 வருடங்கள் கல்விப் பணியில் இருந்து திருகோணமலை கோட்டக்கல்வி பணிப்பாளர் செந்தில்வடிவேல் சண்முகநாயகம் ஓய்வு பெற்று செல்கின்றார்.

இவருக்காண சேவை நயப்பு நிகழ்வு திருகோணமலை வலயக் கல்வி அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

திருகோணமலை வலயக் கல்வி பணிப்பாளர் தினகரன் ரவி தலைமையின் கீழ் நடைபெற்ற இந்நிகழ்வில் உதவி கல்வி பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இவருக்கான பாராட்டு நிகழ்வை திருகோணமலை வலயக் கல்வி அலுவலகத்தின் கல்வி அபிவிருத்திப் பணிக் குழுமத்தினர் ஏற்பாடு செய்திருந்தனர்.

திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியில் பிரதி அதிபராகக் கடமையாற்றி, இலங்கை அதிபர் சேவையின் முதலாந்தரத்தைச் சேர்ந்த சண்முகநாயகம், 1988.05.15 ஆம் திகதி கும்புறுபிட்டி மெதடிஸ்த மிஷன் பாடசாலையில் ஆசிரியராக தனது முதல் நியமனம் பெற்றிருந்தார்.

2003 ஆம் ஆண்டு யாழ் பல்கலைக் கழகத்தில் முதுமாணி பட்டம் பெற்று 2004 ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை திருகோணமலை தேசிய கல்விநிர்வாக (என்.ஐ.ஈ.) பிராந்திய நிலையத்தின் கல்விமாணி பட்டக் கற்கை நெறி, பட்டப்படிப்பின் கல்வி டிப்ளோமா ஆசிரியர்களுக்கு கல்வி உளவியல், கல்வித் தத்துவம், ஆய்வுமுறையில் வழிகாட்டல் ஆலோசனை விரிவுரையாளராகவும் கடமையாற்றுகின்றார்.

36 வருட கல்வி சேவை அனுபவத்தைக் கொண்ட சண்முகநாயகம், திருக்கோணமலை சண்முகா இந்து மகளிர் கல்லூரி மற்றும் திருக்கோணமலை கோணேஸ்வரா இந்து கல்லூரி ஆகிய பாடசாலைகளில் நீண்ட காலம் சேவையாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஒழுக்கமுள்ள, நல்ல மாணவர்களை உருவாக்கிய பெருமையும் இவரைச் சாரும்.

# முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அதாவுல்லாவினது மக்கள் சந்திப்பு

(ஜிப்ரான்)

மூதூர் பிரதேசத்தில் சனிக்கிழமை மாலை மக்கள் சந்திப்பை மேற்கொள்வதற்காக தேசிய காங்கிரஸின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்றஉறுப்பினருமானஅதாவுல்லாஹ் மற்றும் தேசிய காங்கிரஸின் உப தலைவர் உதுமான் லெப்பை , மூதூர் தேசிய காங்கிரஸின் அமைப்பாளர் டாக்டர் சியா மற்றும் மூதூர் மத்திய குழு தலைவர் நிஹார் கலந்து கொண்டனர்.

இதன் போது நடைபெற இருக்கும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது. இதன் போது பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருந்தன.

அத்துடன் மக்கள் தேவைகளைக் கேட்டறிந்து. அவற்றினை மிக விரைவாக நிவர்த்தி செய்வதாகவும் மற்றும் மூதூர் பிரதேசங்களுக்கு பல அபிவிருத்திக்கான வேலை திட்டங்கள் செய்ய இருப்பதாகவும் மற்றும் பல வேலை திட்டங்கள் செய்திருப்பதாகவும் மக்களுக்கு தெளிவுபடுத்தி இருந்தார்.

மற்றுமொரு மக்கள் சந்திப்பை மிக விரைவாக மூதூர் பிரதேசங்களில் மேற்கொள்ள இருப்பதாகவும் மக்களுக்குத் தெரிவித்திருந்தார்.

# சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு திருமலையில் கிளீன் சிறிலங்கா வேலைத் திட்டங்கள் முன்னெடுப்பு!

(ஹஸ்பர்)

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு சனிக்கிழமை திருகோணமலை கரையோரம் ஒரு கிலோமீற்றர் தூரத்துக்கு சுத்தம் செய்யப்பட்டது. குறித்த நிகழ்வை திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலக கரையோர பாதுகாப்புத் திணைக்களம் ஏற்பாடு செய்திருந்தது.

இதன்போது திருகோணமலை பிரதான கரையோர பகுதியில் உள்ள பிளாஸ்டிக் கழிவுகள், போத்தல்கள் உட்பட பல பொருள்கள் சுற்று சூழலில் இருந்து அகற்றப்பட்டன. கரையோர பகுதிகளை சுத்தமாக வைத்திருக்கும் நோக்கில் இது நடைமுறைப்படுத்தப்பட்டது. இதில் திருகோணமலை





நகர சபை செயலாளர் ஜெயவிஸ்னு, கரையோர பாதுகாப்புத்திணைக்களத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ். தீபராஜ், மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சைசதனி, மகளிர் சங்க பிரதிநிதிகள், ஆசிய காப்புறுதி நிறுவன ஊழியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



# சம்மாந்துறை பிரதேச செயலக சர்வதேச மகளிர் தின நிகழ்வு



(சர்ஜுன் லாபீர்)

'எல்லா பெண்களுக்கும் உரிமைகள், சமுத்துவம், அதிகாரம் அளிப்பதை விரைவில் செயல்படுத்துதல்' எனும் மகுட வாசகத்தை அடிப்படையாகக் கொண்டு உலகம் பூராகவும் கொண்டாடப்படும் 114 ஆவது சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு சுவாட் அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்ட சர்வதேச மகளிர் தின நிகழ்வுகள் சனிக்கிழமை மல்வதை புதுநகர் அரசினர் தமிழ் பாடசாலையில் இடம்பெற்றது.



இந்த நிகழ்வுக்கு பிரதம அதிதியாக சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.முஹம்மது ஹனீபா கலந்து கொண்டு சிறப்பித்தார்.

மேலும் இந்நிகழ்வில் சம்மாந்துறை பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் எ.அகமட் சபீர், நாவிதன்வெளி பிரதேச செயலக உளவளத்துறை உத்தியோகத்தர் ஏ. சுதர்தன் உட்பட சுவாட் அமைப்பின் உயர் அதிகாரிகள் மற்றும் பல்வேறுபட்ட மகளிர் அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இந் நிகழ்வில் மல்வத்தை வளத்தாபிட்டி, வீரமுனை, சொறிக்கல்முனை ஆகிய கிராமங்களிலிருந்து கலை,கலாசார, இலக்கிய மற்றும் சமூக சேவைகளில் தங்களது திறமைகளை வெளிக்காடிய பெண்கள் கௌரவிக்கப்பட்டதோடு மட்டுமின்றி பிரதேச செயலாளர் மற்றும் சமூக சேவை உத்தியோகத்தர்களின் சேவைகளை பாராட்டியும் விருதுகள் வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.





காலைக்கதிர் Kalaikkathir

# கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் சர்வதேச மகளிர் தின நிகழ்வு கோலாகலம்

(பாறுக் ஷிஹான்)

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரி.ஜே அதிசயராஜ் வழிகாட்டலில் மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி தனலெட்சுமி முரசொலிமாறன் தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் பிரதம அதிதியாக பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் திருமதி கங்கேஸ்வரி கமலநாதன் கலந்து கொண்டார். சிறப்பு அதிதிகளாக கிராம நிர்வாக உத்தியோகத்தர் ஏ.அமலதாஸ், பெண்கள் அபிவிருத்தி மன்றம் ஸ்தாபக தலைவி ருத் சந்திரிகா சுரேஸ், மத்தியஸ்த சபை அபிவிருத்தி உத்தியோகத்தர் கே.அருள் பிரசாந்தன், உளவளத்துணை உதவியாளர் ஐ.எம்.இல்யாஸ், மகளிர் அபிவிருத்தி வெளிக்கள உத்தியோகத்தர் யூ.றமீஸா, உட்பட பெரியநீலாவணை , நற்பிட்டிமுனை, கல்முனை பிரிவுகளை சேர்ந்த மகளிர் அமைப்பின் மற்றும் கல்முனை மகளிர் மன்றத்தின் உறுப்பினர்கள் எனப்பலர் கலந்து கொண்டனர்.

இம்முறை ' பெண்கள் உரிமைகள் குறித்து விழிப்புடன் இருப்போம் ' என்ற தொனிப்பொருளில் சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்படுகிறது.

இங்கு வீட்டு வன்முறை பால்நிலை சமத்துவம் மற்றும் மகளிர் தின நிகழ்வு தொடர்பான விழிப்புணர்வு மகளிர் பற்றிய சட்டங்கள், குற்றங்கள், பாதிப்பு மற்றும் போதைப் பொருளினால் சீரழியும் குடும்பங்கள் பற்றிய விழிப்புணர்வு செயலமர்வு உட்பட பல விடயங்கள் ஆராயப்பட்டன.










காலைக்கதிர் Kalaikkathir

# சாய்ந்தமருது பிரதேச செயலகத்தில் சனியன்று மகளிர் தின நிகழ்வுகள்

(நூருல் ஹுதா உமர்)

பெண்களை போற்றும் விதமாகவும் பெண்களின் பிரதிநிதித்துவத்தை உணர்த்தும் விதமாகவும் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் எட்டாம் திகதி சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்பட்டு வருகின்றது. அந்த அடிப்படையில் சாய்ந்தமருது பிரதேச செயலகம், சமுர்த்தி வங்கி சங்கம் மற்றும் சமூக அபிவிருத்திப் பிரிவு என்பன இணைந்து ஏற்பாடு செய்திருந்த சர்வதேச மகளிர் தின நிகழ்வுகள் சாய்ந்தமருது பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் சனிக்கிழமை சாய்ந்தமருது சமுர்த்தி வங்கி சங்கத்தின் திட்ட முகாமையாளர் எஸ். றிபாயா தலைமையில் இடம்பெற்றது.

பெண்களுக்கான உரிமைகள், பாலின பாகுபாடு இல்லாத சமத்துவம் மற்றும் அதிகாரமளித்தல் கிடைத்திட சமூகத்தில் தேவையான மாற்றங்களை செய்யவேண்டிய விழிப்புணர்வை சர்வதேச மகளிர் தினம் வலியுறுத்துகிறது. ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 8 ஆம் திகதி கொண்டாடப்படும் சர்வதேச மகளிர் தினத்திற்கான விதை 1908 இல் போடப்பட்டது.

சாய்ந்தமருதில் இடம்பெற்ற நிகழ்வுக்கு பிரதம அதிதியாக பிரதேச செயலாளர் எம்.எம். ஆஷிக் கலந்து கொண்டிருந்தார். சாய்ந்தமருது பிரதேச செயலக சமுர்த்தி தலைமை பொறுப்பு முகாமையாளர் ஏ.சி.ஏ. நஜீம், சமுர்த்தி வங்கிச் சங்க பணிப்பாளர் றியாத் ஏ. மஜீத் சமுர்த்தி வங்கி முகாமையாளர் ஐ.எல்.எஸ். ஹிதாயா, சமுர்த்தி வங்கியின் சமூக அபிவிருத்தி உதவியாளர் யூ.எல். ஜௌபர் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எவ். றிகாஷா ஷர்பீன் ஆகியோர் கௌரவ அதிதிகளாக கலந்து கொண்டிருந்தனர்.

நிகழ்வின்போது வளவாளர்களால் சர்வதேச ரீதியிலும் உள்நாட்டிலும் மகளிரின் வகிபாகம் தொடர்பில் பல்வேறு தலைப்புக்களில் செயலமர்வுகளும் இடம்பெற்றன.

குறித்த நிகழ்வின்போது இலங்கையின் முதல்





முஸ்லிம் சட்டத்தரணிகள் சங்க தலைவி ஆரிக்கா சாரிக் காரியப்பருக்கு கௌரவமளிக்கப்பட்டது.

## யாழில் பெண் தலைமைத்துவ குடும்பத்தின் வீட்டினுள் இரவுவேளை நுழைந்த யூடியூப்பர்

### பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைப்பு

யாழ்ப்பாணம், பருத்தித்துறை பகுதியைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் வறியவர்களுக்கு உதவி செய்வதாக புலம்பெயர் தமிழர்களிடம் நிதியினை பெற்று, அதன் ஊடாக உதவி செய்வது போன்ற காணொளிகளை தனது யூடியூப் தளத்தில் பதிவேற்றி வந்துள்ளார்.

இந்நிலையில், கடந்த சில தினங்களுக்கு முன்னர் தந்தையை இழந்து தாயின் அரவணைப்பில் வாழ்ந்து வரும் பாடசாலை மாணவியொருவரிடம் இரவு வேளை சென்ற குறித்த நபர், பாடசாலை மாணவியை காணொளி எடுக்க முற்பட்டுள்ளார். அதற்கு மாணவி மறுப்பு தெரிவிக்கவே, காணொளியில் நாகரிகமற்ற வார்த்தைகளை பயன்படுத்தியுள்ளார்.

குறித்த காணொளி சமூக வலைத்தளங்களில் பரவியதை அடுத்து பல்வேறு தரப்பினரும், தமது கண்டனங்களை தெரிவித்து இவ்வாறான செயற்பாடுகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், இவ்வாறு உதவி செய்பவர்களின் நிதி கையாடுகைகள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் என கோரி வருகின்றனர்.

இந்நிலையில், மனிதவுரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகம், சிறுவர் நன்னடத்தை பிரிவினர் உள்ளிட்ட தரப்பினர்கள் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இதேவேளை, நாடாளுமன்றில் சனிக்கிழமை நாடாளுமன்ற உறுப்பினர் அருச்சுனா இராமநாதனும் குறித்த சம்பவத்திற்கு சபையில் கண்டனம் தெரிவித்து இருந்தமையும் குறிப்பிடத்தக்கது.




காலைக்கதிர் Kalaikkathir

# தேசிய மக்கள் சக்தியின் மகளிருக்கான ஒன்றுகூடல்

## வவுனியாவில் நேற்று இடம்பெற்றது



தேசிய மக்கள் சக்தியின் மகளிருக்கான ஒன்று கூடல் நாடாளுமன்ற உறுப்பினர் சமன்மலி குணசிங்க பங்குபற்றுதலுடன் வவுனியாவில் இடம்பெற்றது.

வவுனியா, இறம்பைக்குளம் பகுதியில் உள்ள விருந்தினர் விடுதி ஒன்றில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) இந்த நிகழ்வு இடம்பெற்றது.

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு மகளிருக்கான ஒன்று கூடல் என்னும் தொனிப் பொருளில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன்போது, மகளிர் எதிர்நோக்கும் பிரச்சினைகள், மகளிருக்கான அபிவிருத்தி செயன்முறைகள் மற்றும் வரவிருக்கும் உள்ளூராட்சி தேர்தலில் மகளிரின் பங்குபற்றல் தொடர்பாகவும் விரிவாக கலந்துரையாடப்பட்டது. அத்துடன் விழிப்புணர்வு நிகழ்வுகளும் இடம்பெற்றது.

தேசிய மக்கள் சக்தியின் வவுனியா மாவட்ட அமைப்பாளர் சியானி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினரான சமன்மலி குணசிங்க, பேராசிரியரும் விரிவுரையாளருமான ஜவதனா செல்வராஜ், வவுனியா பிரதேச செயலக மகளிர் அமைப்பு தலைவி ரவீந்திராஜ் சுலோஜினி, கட்சி வட்டார உறுப்பினர்கள், கட்சித் தோழர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். 100



# தமிழ் அரசுக் கட்சியின் மாவட்ட அலுவலகம் திறந்து வைப்பு

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மாவட்ட அலுவலகமும், வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்களின் மக்கள் தொடர்பாடல் காரியாலமும் வவுனியா, குருமன்காடு காளிகோவில் வீதியில் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

நிகழ்வில் அதிதிகளாக கலந்து கொண்ட கட்சியின் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர் ப.சத்தியலிங்கம் ஆகியோர் புதிய அலுவலகத்தை நாடாவெட்டி திறந்து வைத்தனர்.

இதன்போது கட்சியின் பிரதேச கிளைக்களுக்கு பொறுப்பானர்கள் மற்றும் மகளிர் அணி செயற்பாட்டாளர் ஆகியோருக்கான நியமன கடிதமும் வழங்கி வைக்கப்பட்டது.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர்களான து.ரவிகரன், க.கோடீஸ்வரன், ஞா.சிறிநேசன், குகதாசன், சிறிநாத், இ.சாணக்கியன் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், கட்சியின் மத்தியகுழு உறுப்பினர்கள், மாவட்டகிளையினர் என பலர் கலந்து கொண்டனர். 100








இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 10.03.2025இல் வெளியிடப்பெற்றது